வேதாந்தம்
வழி நூல்கள்.

ஸ்ரீ ... ஸ்தோத்ரம

21-4

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

கனகதாரா ஸ்தோத்ரம்

5994
R65(ஆதி)

... பிரஸ், திருவல்லிக்கேணி.

A83 21-4
கோவிலூர் ஆதீனம்
5994
R65
கோவிலூர்-630 307

உ

ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாள் அருளிச்செய்த

கனகதாரா ஸ்தோத்ரம்

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சிகாமகோடி பீடாதிபதி அவர்கள்
ஸ்ரீமடம் வித்வானும், தர்ம ப்ரசாரகரும்,
ஸ்ரீ ஜகத்குரு ச்ருங்கேரி மடம் ஸநாதன தர்ம ப்ரசாரகரும்,
சாஸ்த்ரரத்னம், வேதமூர்த்தி, கவிகுஞ்சரம்,
வித்யாவாக்பதி, வேதாந்த தத்வ மஹோபதேசகர்,
முதலான அநேக பிருதுகளால் அலங்கரிக்கப்பட்டவருமான

ப்ரம்மஸ்ரீ சாஸ்த்ர ரத்னம்
தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரியள்
அவர்களால் எழுதப்பட்டது.

பதிப்பாளர்:
கிரி பிரதர்ஸ்
திருவல்லிக்கேணி, சென்னை.

1943

All Rights Reserved] [விலை அணா 12

1943 — 12 அணா

ஶ்ரீ:

கனகதாரா ஸ்தோத்ர வரலாறு

शंकरं शंकराचार्यं लक्ष्मीं कनकवर्षिणीम् ।
ध्यायतो मे धनं बोधः सुलभो नास्ति मे भयम् ॥

𑌶𑌂𑌕𑌰𑌂 𑌶𑌂𑌕𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌂 𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑍀𑌮𑍍 ।
𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍋 𑌮𑍇 𑌧𑌨𑌂 𑌬𑍋𑌧𑌃 𑌸𑍁𑌲𑌭𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌭𑌯𑌮𑍍 ॥

சங்கரம் சங்கராசார்யம் லக்ஷ்மீம் கநகவர்ஷிணீம் ।
த்யாயதோ மே தநம் போத: ஸுலபோ நாஸ்தி மே பயம் ॥

இந்த புண்ய பூமியில் ஸுகத்திற்கு ஹேதுவான ஸநாதன தர்மம் குறைந்து நிற்கும் காலங்களில், ஸர்வேச்வரனான பகவானே அடிக்கடி மநுஷ்ய வடிவாக அவதாரம் செய்கிறார் என்பது

अजोऽपिस्सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपिसन् ।
प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया ॥
यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

𑌅𑌜𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌨𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 ॥
𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

அஜோபிஸ்ஸந்நவ்யயாத்மா பூதாநாமீச்வரோபிஸந் ।
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ॥
யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத ।
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥

என்றது முதலான சாஸ்த்ரங்கள் மூலம் ப்ரஸித்த மானது. உண்மையில் ஸ்வயமாக பிறப்பற்ற பகவானும் ப்ராணிகளிடம் உள்ள கருணையால் பிறந்தார்போல் மாயையினுல் நடித்து விளையாடுகிருர். அப்படிச் செய்யும் பகவானுடைய அவதார லீலைகளில் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் என்ற பெயரால் விளங்கும் மூர்த்தியும் ஒரு அபூர்வமான அவதாரமாகும். அந்த அவதாரம் பரமேச்வரனுடைய பூர்ண ஸ்வரூபம் என்றே சொல்லவேண்டும். அந்த அவதாரத்தில் தன்னுடைய பால்ய பருவத்திலேயே ஸந்யாஸம் என்ற உத்தமமான ஆச்ரமத்தை ஸ்வீகரித்துக்கொண்டு லோக ஸஞ்சாரம் செய்தல் என்ற வ்யாஜத்தால், துர்மதங்களைக் கண்டித்து, வைதிக மதத்தை ஆங்காங்கு ஸ்தாபனம் செய்து ஸகல ப்ராணிகளும் அந்த ஸித்தாந்தத்தை அநுஷ்டித்துவரச் செய்தார்கள் மனிதனுல் செய்யமுடியாததான அபூர்வமான சில லீலைகளைக் கொண்டு தான் மனிதனல்ல, பரமேச்வரன் என்பதையும், ஆங்காங்கு ஸூசிப்பித்திருக்கிருர்.

அவ்விதமான அமாநுஷ்யமான லீலைகளோ ஸ்ரீசங்கரவிஜயத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குள் தன்னுடைய ப்ரம்மசர்ய ஆச்ரமத்தில் தான் குருவினிடத்தில் வேதாத்யயனம் செய்யும் ஸந்தர்பத்தில் ஸ்ரீசங்கராசார்யாள் தன்னுடன் சில ப்ரம்மசாரிகளையும் அழைத்துக்கொண்டு ஒரு ஸத்ப்ராம்மணனுடைய க்ருஹத்தில் பிக்ஷைக்குச் சென்றபொழுது ஏற்பட்ட லீலையாகும் இந்த கனகதாரா ஸ்தோத்ரம் என்ற நூல்,

கேரள தேசத்தில், பூர்ணு நதீ தீரத்தில், காலடி என்ற க்ஷேத்ரத்தில் சிவகுரு என்ற மஹா ப்ராம்மண னுடைய தர்மபத்னியான ஆர்யாம்பாள் என்ற பதிவ்ரதா ஸ்த்ரீயினிடம் பரமசிவன் புத்ரனுக அவ தரித்து ஸ்ரீசங்கரர் என்ற பெயருடன் லோகமுழுதும் ப்ரஸித்தமாக விளங்கி வந்தார்.

தனக்கு ஐந்தாவது வயதில் உபநயனம் ஆன வுடன் தன்னைப்போலொத்த சில மாணுக்கர்களோடு சேர்ந்து குருவினிடத்தில் வேதாத்யயனம் செய்து வந்தார். தன் பிதாவினுல் ஸம்பாதிக்கப்பட்ட ஸகல பொருள்களையும் பிதாவினுடைய யக்ஞத்திலேயே, ஸத்ப்ராம்மணர்களுக்கு விநியோகம் செய்துவிட்டு மிகவும் தாரித்ரியா அவஸ்தையில் தானிருப்பதுபோல் நடித்துக்கொண்டு, அப்பொழுதும் நிரம்பவும் வய தான தனது மாதாவை உபசரித்துக்கொண்டு அந்த அக்ரஹாரத்திலுள்ள க்ருஹங்களுக்கு ஒவ்வொரு தின மும் சென்று பிக்ஷாடனம் செய்து, பிக்ஷையில் கிடைத்த அன்னத்தை தன் தாயை புஜிக்கும்படி செய்துவிட்டு மீதியுள்ள அன்னத்தைத் தானும் புஜிக்கும் வழக்கமாக இருந்துவந்தது.

இவ்விதமான ஸந்தர்ப்பத்தில், ஒரு தினம் அந்த அக்ரஹாரத்திலுள்ள ஒரு மஹா ப்ராம்மணனுடைய க்ருகத்திற்கு பிக்ஷைக்குப் போனுர். அந்த க்ருஹ மோ தாரித்ரியத்தால் நிறைந்த க்ருஹம். ஸோமதேவர் என்ற அந்த ப்ராம்மணருடைய வித்யை நிரம்ப வும் உயர்ந்தது. அவருடைய தர்மபத்னி தர்மசீலே என்னும் பெயருடையாள். அவர் ப்ரதிக்ரஹ வ்ருத் தியைக் கொண்டு ஜீவிக்கும் வழக்கமானதால் அன் றைய தினம் க்ராமாந்தரத்திற்கு ப்ரதிக்ரஹ வ்ருத் தியை அநுஸரித்துப் போயிருந்தார். ஆசார்யாள் பிக்ஷைக்குப் போன ஸமயத்தில் அந்த க்ருஹத்தில் தர்மசீலே என்ற அம்மாள் மாத்ரமே இருந்தாள். ஆசார்யாளோ தனது ஸ்நேஹிதர்களுடன் க்ருஹத்

21-4

திற்குள் சென்று "भवति भिक्षान् देहि" (ஹவதி ஹிக்ஷாநு தெஹி) (பவதி பிக்ஷாந் தேஹி) என்ற மந்த்ரத்தை மூன்று ஆவர்த்தி உயர்ந்த ஸ்வரத்துடன் ஜபித்து அன்ன பிக்ஷயை யாசித்தார்:— 'பதிவ்ரதா சிரோமணியான ஹே பரதேவதே! அன்ன பிக்ஷயை எனக்குக் கொடு' என்பது அந்த மந்திரத்தின் பொருளாகும். இந்த வார்த்தையைக் கேட்டு வீட்டிற்குள் இருந்த அம்மாளோ, 'யாரோ ப்ரம்மசாரி வீட்டிற்கு பிக்ஷக்கு வந்திருக்கிறன்' என்று நினைத்து எதிரில் வந்து பார்க்கும்பொழுது ஆசார்யாளுடைய மூர்த்தியை தர்சித்து, 'ஸாக்ஷாத் பரமேச்வரனே நம்மைச் சோதிக்க இந்த ரூபத்துடன் வந்திருக்கிறர்' என்று தீர்மானித்து "சங்கரா! உன்னைப்போலொத்த மஹா ப்ரம்மசாரிகளுக்கு பிக்ஷான்னம் கொடுக்கும்படியான பாக்யத்தை நான் செய்யவில்லை, என் பர்த்தா ஒவ்வொரு தினத்திலும் தனிகர்களிடம் சென்று ஏதாவது யாசித்து வருவார். பிறகுதான் அரிசிமுதலான பதார்த்தங்களை வாங்கி புஜிப்பது வழக்கம். அதுபோல் இன்றும் ஸமீபத்திலுள்ள க்ராமங்களுக்குப் போயிருக்கிறர். அவர் வந்து தான் சமையல் ஆகவேண்டும். இந்த ஸமயத்தில் அன்னமும் இல்லை. நீயோ பிக்ஷக்கு வந்திருக்கிறய். நான் மஹாபாபியாக ஆகிவிட்டேன்" என்று வருத்தத்துடன் கூறினள்.

ஆசார்யாளோ அந்த அம்மாளை ஸமாதானம் செய்துவிட்டு "தாயே! உன்னுடைய வீட்டில் ஒன்றுமே இல்லையா? அன்னமில்லாவிட்டாலும் ஏதாவது உப வ்யஞ்சனதிகள் (ஊறுகாய்கள்) இருந்தாலும் போதும். அதை பிக்ஷயாகக் கொடுத்தாலும் திருப்தி அடைவேன்" என்று மறுபடியும் பிக்ஷயை யாசித்தார்.

भिक्षुं निष्कासयेन्नैव गृहीश्रेय यदीच्छति ।
आपद्यपि विशुद्धस्सन् गृह्णीयात् पूजयेदमुम् ॥

𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌸𑌯𑍇𑌨𑍍𑌨𑍈𑌵 𑌗𑍃𑌹𑍀 𑌶𑍍𑌰𑍇𑌯 𑌯𑌦𑍀𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌆𑌪𑌦𑍍𑌯𑌪𑌿 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌸𑌨𑍍 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑌮𑍁𑌮𑍍 ॥

பிக்ஷார்தம் நிஷ்காஸயேந்நைவ க்ருஹீச்ரேய யதீச்சதி ।
ஆபத்யபி விசுத்தஸ்ஸந் க்ருஹ்ணீயாத் பூஜயேதமும் ॥

தாயே! இந்த சாஸ்த்ரத்தை உன் பர்த்தா மூலம் நீ கேட்டிருக்கலாம். "பிக்ஷைக்கு வந்த ப்ரஹ்மசாரியையோ, ஸந்யாஸியையோ 'இல்லை' யென்று சொல்லிப்போகச் சொல்லக்கூடாது. தன்னுடைய குடும்பத்தின் நன்மையை விரும்புகிற புருஷன் எவ்விதமான ஆபத்காலத்திலும் யத்ருச்சையாக வந்த ப்ரம்மசாரியையும், ஸந்யாஸியையும் ஆதரவுடன் வரவேற்று பூஜிக்கவேண்டும்" என்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. உனக்கு அது தெரியாதா! உன்னுடைய பர்த்தா பெரிய வித்வான். ஆகையால் என்னைப்போலொத்த பிக்ஷுவை 'ஒன்றுமில்லை' என்று சொல்லி போகச் சொல்லக்கூடாது. ஏதாவது இருப்பதைக் கொண்டுவந்து பிக்ஷை அளிக்க வேண்டும்" என்று மறுபடியும் வற்புறுத்தினர். வீட்டு அம்மாளோ நிரம்பவும் வருத்தத்துடன் வீட்டில் உண்மையில் நல்லதான பொருள் ஒன்றையும் காணமல், சிலநாட்களுக்கு முன்பு செய்துவைக்கப்பட்ட நெல்லிக்காய் ஊறுகாய் பாத்ரத்தைப் பார்த்தாள். அதற்குள் ஒரு நெல்லிக்காயும் இருந்தது. அதை எடுத்து பரம ஆதரவுடன் ஆசார்யாளிடம் பிக்ஷையாக அளித்து பூஜித்தாள். ஆசார்யாளுக்கோ பரம ஸந்தோஷமேற்பட்டு விட்டது. வீட்டு அம்மாளைப் பார்த்து "அம்மணீ! இந்த அபூர்வமான பதார்த்தம் இருக்கும்பொழுது 'ஒன்றுமில்லை' என்று எதற்காக நீ வருத்தப்பட்டாய்? ஞானிகளுக்கு ஏற்பட்ட ஆகாரமல்லவா இந்த பதார்த்தம்! அதிலும் என் தாயாருக்கு இதில் நிரம்பவும் ப்ரேமை உண்டு. நானும் எவ்வளவோ நாட்களாக இந்த

க்ராமத்தில் பிக்ஷை எடுக்கின்றேன். இன்றுதான் கிடைக்கக்கூடாத பொருள் கிடைத்ததாக என் மனதில் ஸந்தோஷம் எழுந்திருக்கிறது. இந்த க்ரஹம் இனி பரமசுத்தமாக ஆகிவிட்டது. குபேர க்ருஹம் என்றே இதைச் சொல்லவேண்டும். நீங்கள் இனி 'பிக்ஷை எடுத்து ஜீவிப்பது' என்ற கஷ்டம் இந்த க்ஷணத்துடன் நிவ்ருத்தியாகிவிட்டது" என்று பரிபூர்ணமாக அநுக்ரஹம் செய்துவிட்டு, சற்றுநேரம் அங்கேயே நின்றுகொண்டு அஞ்ஜலிபந்தத்துடன், மஹாலக்ஷ்மீயினுடைய மூலமந்த்ரத்தை த்யானம் செய்துவிட்டு, இந்தக் கனகதாரா ஸ்தோத்ர ச்லோகங்களால் மஹாலக்ஷ்மீயை அந்த க்ருஹத்தில் பூர்ண கடாக்ஷம் ஏற்படும்படி ஆஹ்வானம் செய்தார். உடன் மஹாலக்ஷ்மீயும் ப்ரத்யக்ஷமாக அங்கு ஆவிர்பவித்தாள். ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால், திருப்தியடைந்த மஹாலக்ஷ்மீயானவள், "எதற்காக நான் இங்கு ஆஹ்வானம் செய்யப்பட்டேன்?" என்று கேட்டவுடன், ஸ்ரீ சங்ராசார்யாளும், "இந்த ப்ராம்மண க்ருஹத்தை உன் கடாக்ஷத்தால் குபேர க்ருஹமாகச் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். இதைக்கேட்ட லக்ஷ்மீதேவி, "சங்கரா! இந்த வீட்டு யஜமானனும் அவரது பத்னியும் முன் ஜன்மாவில் குசேலர், சுசீலை என்று சொல்லப்பட்ட தம்பதிகளாக இருந்தவர்கள். கர்மவசத்தால் முன் ஜன்மாக்களிலும் இவர்கள் தாரித்ரியாவஸ்தையை அடைந்தவர்கள்தான். ஆனால் அந்த ப்ராம்மணனே மஹாஞானி. பிறகு ஸ்ரீக்ருஷ்ண பகவானுடைய ப்ரஸாத விசேஷத்தால் தனிகர்களாக ஆனார்கள். தனத்தால் நிரம்பவும் செழிப்பாக இருக்கும் காலத்தில், தனமில்லாத காலத்திலிருந்த பக்தி விசேஷம் குறைந்து, அஹங்காரத்தால் இஷ்ட தேவதா நமஸ்காராதிகளைக் கூட விட்டு விட்டு, கேவலம் வைஷீக ஸுகபராளாக ஆகிவிட்டார்கள். இவர்களுக்கு தனத்தை அளித்த க்ருஷ்ணனே, ஒரு ஸமயம் ப்ராம்மண வேஷதாரியாக

மத்யான காலத்தில் போஜனத்திற்காக இவர்களுடைய க்ருஹத்திற்குச் சென்று யாசித்தார். இவர்கள் போஜனம் கொடுக்காமல் மறுத்துவிட்டார்கள். அந்த பாபத்தால் மறுபடியும் தாரித்ரிய நிலைமையை அநுபவிக்கும்படி நேர்ந்து, இந்த ஜன்மாவிலும் இந்த அவஸ்தையை அடைந்திருக்கிறார்கள். இவ்விதமிருக்க, இவர்களுடைய க்ருஹத்தை குபேர க்ரஹமாகச் செய்யவேண்டுமென்று என்னை அழைத்தாயே! நான் எவ்விதம் அப்படிச் செய்யமுடியும்?'' என்று கூற, பகவானான சங்கரரும், “ ஹே தேவீ! ‘ நான் யார் என்று உனக்குத் தெரியும். நான் ப்ரம்மசாரியாக பிக்ஷைக்கு வந்திருக்கிற காலத்தில் எனக்கு பிக்ஷை கொடுத்த பிற்பாடும் ‘அவர்களிடம் பாபம் இருக்கிறது' என்று சொல்வது ந்யாயம் இல்லை. ஸன்யாஸிகளோ, ப்ரம்மசாரிகளோ யத்ருச்சையாக வந்த காலத்தில், அவர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு ஏதாவது தானம்—உத்தரணி தீர்த்தம்—கொடுத்தாலும் மஹாமேருவை தானம் செய்ததற்கு ஸமானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வாமன அவதாரம் செய்த விஷ்ணுவிடம், மஹாபலி சக்ரவர்த்தி தானம் செய்து க்ருதார்த்தனாக ஆகவில்லையா? அதுபோல் எனக்கு பிக்ஷையை அளித்த இந்த தம்பதிகள் மஹா பரிசுத்தர்களாக ஆகிவிட்டார்கள். சங்கரனுக்கு பிக்ஷை கொடுத்த பிற்பாடு, பிக்ஷை கொடுத்தவர்களிடம் பாபலேசமே யிராது. இவர்களுடைய பூர்வ வ்ருத்தாந்தம் எனக்கும் கொஞ்சம் தெரியும். ஸ்ரீ க்ருஷ்ண பகவான், இவர்களுடைய க்ருஹத்தில் ப்ராம்மண வேஷதாரியாக போஜனம் செய்யப் போன தினமோ மஹா சிவராத்ரி வ்ரத தினமாகும். வ்ரத தினத்தில் அதிதி வந்தாலும் போஜனம் கொடுக்கக்கூடாது என்றுதான் சாஸ்த்ரம் சொல்லியிருக்கிறது. அத்த சாஸ்த்ரத்தை அநுஸரித்துத்தான் இவர்கள் முன் ஜன்மாவில் போஜனமளிக்க மறுத்தார்கள். ஆகிலும், அன்று மஹா கைலாஸவாஸி

யான பரமசிவனுக்கு அதிகமான பஹுமானத்தைச் செய்யவேண்டிய ஸந்தர்ப்பமான காரணத்தால் அந்த பரமசிவனே, தன்னை பூஜிக்கவேண்டிய தினத்தில், அதிதிகளை ஸத்காரம் செய்யாத காரணத்தால் இந்த ஜன்மாவில் தாரித்ரியத்தை அநுபவிக்கும் இந்த தம்பதிகளை தானே ப்ரம்மசாரியாக வந்து இவர்களிடமிருந்து ஏதாவது யாசித்து அவர்களை தனிகர்களாகச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் அவதரித்த பரமசிவனாக இருக்கக் கூடாதா நான்? உனக்கும் தேவ ரஹஸ்யத்தைச் சொல்லவேண்டுமா?" என்று பரமாசார்யாள் சொன்னவுடன், லக்ஷ்மீதேவியும் ப்ரஸன்னமாகி தங்கமயமான பெரிய நெல்லிக்காய்களாகவே அந்த தம்பதிகளுடைய க்ருஹத்தைப் பூர்த்தி செய்து, அவர்களை எப்பொழுதும் லக்ஷ்மீகடாக்ஷத்திற்குப் பூர்ண பாத்ராளாகச் செய்துவிட்டு ஆசார்யாளாலேயும் பூஜிக்கப்பட்டு, ஆசார்யாளைப் பார்த்து, "உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக் கொள்" என்று சொல்ல, "நான் உன்னை ப்ரார்த்தித்து அழைத்த ச்லோகங்களை எவர்கள் தினந்தோறும் பாராயணம் செய்து உன்னை த்யானம் செய்கிறார்களோ, அவர்களுடைய க்ருஹங்களில் நீ எப்பொழுதும் பரிபூர்ணமான ஸாந்நித்யத்தை அடைந்து விளங்கவேண்டும், அதுதான் எனக்கு ஏற்பட்ட வரமாகும்" என்று ப்ரார்த்தித்தார். லக்ஷ்மீதேவியும் அவ்விதம் ஸம்மதித்து விட்டு அந்தர்த்யானத்தை அடைந்தாள்.

இதனால் இந்த கனகதாரா ஸ்தோத்ரத்தை ப்ரதி தினம், எவர் பாராயணம் செய்துகொண்டு லக்ஷ்மீதேவியை த்யானம் செய்து வருகிறார்களோ அவர்களுடைய க்ருஹத்தில் லக்ஷ்மீதேவியானவள் வாஸம் செய்கிறாள் என்பது ஸித்தமாகிறது, தாரித்ரியத்தை அடியோடு ஒழிப்பதற்கு ஒவ்வொரு க்ருஹத்திலும் இந்த கனகதாரா ஸ்தோத்ரம் என்ற புஸ்தகம் இருப்பது ஒரு சிந்தாமணி யிருப்பதுபோலாம் இந்த ஸ்தோத்ர

பாராயணம் நடக்கும் க்ருஹத்தில் பொருளுக்குக் கொஞ்சமேனும் குறைவு வராது என்பது ஸாத்ய மாகும். கேவலம் பொருள் மாத்ரம் வ்ருத்தியாகும் என்பதல்ல. இந்த ஸ்தோத்ரத்தில் பூஜிக்கப்படும் தேவதை பொருளுக்கு அதிதேவதையானதால் பொருளும் ஏராளமாக வ்ருத்தியடையும்; இந்த ஸ்தோத்ரத்தைச் செய்த பரமாசார்யாளான சங்கரர் ஞானதாதாவான பரமேச்வரனுதலால், ஞானவ்ருத்தியும் ஏற்படும். இந்த ஸ்தோத்ரத்தை நாம் ப்ரதிதினம் பாராயணம் செய்து வருவதால் பரமசிவன் திருப்தி யடைந்து, அந்த பரமசிவனே, லக்ஷ்மீதேவியை அழைத்து நமது க்ருஹத்தில் ஸ்திரப்படுத்துகிறுர் என்பது ஸித்திக்கிறது.

ஆகையால் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்த ஸ்தோத்ர புஸ்தகமானது ஒரு ரக்ஷையாக இருந்து வரவேண்டுமென்பது அவச்யமாகும்.

திருவல்லிக்கேணி,
6-10-1913.

உ

श्रीशङ्करसद्गुरुभ्यो नमः ॥

कनकधारास्तोत्रम् ।

கனகதாரா ஸ்தோத்ரம்

अङ्गंहरेः पुळकभूषणं आश्रयन्ती
भृङ्गाङ्गनेव मुकुळाभरणं तमालम् ।
अङ्गीकृताखिल विभूतिः अपाङ्गलीला
माङ्गल्यदास्तु मम मङ्गळदेवतायाः ॥ १ ॥

𑌅𑌙𑍍𑌗𑌂𑌹𑌰𑍇𑌃 𑌪𑍁𑌳𑌕𑌭𑍂𑌷𑌣𑌂 𑌆𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍀
𑌭𑍃𑌙𑍍𑌗𑌾𑌙𑍍𑌗𑌨𑍇𑌵 𑌮𑍁𑌕𑍁𑌳𑌾𑌭𑌰𑌣𑌂 𑌤𑌮𑌾𑌲𑌮𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌾𑌖𑌿𑌲 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃 𑌅𑌪𑌾𑌙𑍍𑌗𑌲𑍀𑌲𑌾
𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑌮 𑌮𑌙𑍍𑌗𑌳𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌃 ॥ ௧ ॥

அங்கம்ஹரே: புளகபூஷணம் ஆஶ்ரயந்தீ
ப்ருங்காங்கநேவ முகுளாபரணம் தமாலம் ।
அங்கீக்ருதாகில விபூதி: அபாங்கலீலா
மாங்கள்யதாஸ்து மம மங்களதேவதாயா: ॥ 1 ॥

பதவுரை :—

मुकुलाभरणं - 𑌮𑍁𑌕𑍁𑌲𑌾𑌭𑌰𑌣𑌂 முகுளாபரணம் = மொட்டுகளால் அலங்கரிக்கப்பட்ட तमालं - 𑌤𑌮𑌾𑌲𑌂 - தமாலம் = தமால வ்ருக்ஷத்தை भृङ्गाङ्गनेव - 𑌭𑍃𑌙𑍍𑌗𑌾𑌙𑍍𑌗𑌨𑍇𑌵 - ப்ருங்காங்கநேவ = பொன்வண்டு போல் पुलकभूषणं - 𑌪𑍁𑌲𑌕𑌭𑍂𑌷𑌣𑌂 - புளகபூஷணம் = மொட்டுக்குச் சமானமான மயிற்கூச்சலால் அலங்கரிக்கப்பட்ட हरेः 𑌹𑌰𑍇𑌃 - ஹரே: = மஹாவிஷ்ணுவினுடைய अङ्ग- 𑌅𑌙𑍍𑌗𑌂 - அங்கம் = சரீரத்தை आश्रयन्ती - 𑌆𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍀 - ஆச்ரயந்தீ = ஆச்ரயித்ததாயும் अङ्गीकृताखिल विभूतिः - 𑌅𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌾𑌖𑌿𑌲 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃 - அங்கீக்ருதாகில விபூதி: = ஸமஸ்தமான ஐச்வர்யங்களால் நிரப்பப்பட்டதாயும் உள்ள मङ्गलदेवतायाः - 𑌮𑌙𑍍𑌗𑌲𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌃 - மங்கள தேவதாயா: = மஹாலக்ஷ்மியினுடைய अपाङ्गलीला - 𑌅𑌪𑌾𑌙𑍍𑌗𑌲𑍀𑌲𑌾 - அபாங்கலீலா = கடைக்கண் பார்வையின் விலாஸமானது मम - 𑌮𑌮 - மம = எனக்கு माङ्गल्यदा 𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌦𑌾 - மாங்கள்யதா = ஸௌபாக்யத்தைக் கொடுக்கிறதாக अस्तु - 𑌅𑌸𑍍𑌤𑍁 அஸ்து = ஆகட்டும்.

தாத்பர்யம் :—

மஹாவிஷ்ணுவினுடைய சரீரமானது நீலமேகச்யாமளன் என்ற பழமொழியால் மேகம்போல் கருத்திருக்கும். ஆனல் லக்ஷ்மீதேவியை தான் பரிணயம் செய்துகொண்ட பாக்யத்தை நினைத்து நினைத்து ரோமாஞ்சங்கள் சரீரத்தில் உண்டாயிருக்கின்றன. அந்த ரோமாஞ்சங்கள் ஒவ்வொன்றும், சின்ன புஷ்பத்தின் மொட்டுகள் மாதிரியாகத் தோன்றுகின்றன.

அதை எப்பொழுதும் மஹாலக்ஷ்மீ கடைக்கண்ணுல் பார்த்துக்கொண்டே இருக்கிருள். அந்த லக்ஷ்மீ தேவியினுடைய கடைக்கண் பார்வையாகிற லீலை மஹாவிஷ்ணுவினுடைய சரீரத்திலேயே எப்பொழுதும் விகஸித்து வருவதைப் பார்த்தால், தமால வ்ருக்ஷமென்ற வ்ருக்ஷ விசேஷமானது மொட்டுகளால் அலங்கரிக்கப்பட்டு, அந்த புஷ்ப மொட்டுகளிலுள்ள ரஸத்தை எடுத்துக்கொண்டுபோக பொன் வண்டுகள் அதை ஆச்ரயித்தால் அது எப்படி இருக்குமோ அது போல் தோன்றுகிறது. லக்ஷ்மீயினுடைய அபாங்க லீலைக்கு ப்ருங்காங்கனையை உதாரணமாகச் சொன்னதினுல் ப்ருங்காங்கனைக்கு புஷ்பங்களிலுள்ள ஸாரமான ரஸம்தான் தென்படுவதுபோல், அம்பாளுடைய கடாக்ஷத்திற்கும், பக்தகோடிகளினுடைய குணந்தான் தென்படுமேயொழிய தோஷங்களை தேவி கவனிக்கமாட்டாள் என்பது தெரிகிறது. தமால வ்ருக்ஷத்தை மஹாவிஷ்ணுவிற்கு உதாரணமாய்ச் சொல்லியிருப்பதைப் பார்க்க, வ்ருக்ஷங்கள் எவ்விதம் தனது சாயையினுல், வெய்யிலில் தபிக்கப்பட்ட ஜனங்களுக்கு ஸுகத்தைக் கொடுக்குமோ, அதுபோல் மஹாவிஷ்ணுவும் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்று மூன்றுவிதமான தாபங்களால் தபிக்கப்பட்ட ஜீவகோடிகளுக்கு தாபத்தை நிவர்த்திசெய்து சுகத்தைக் கொடுக்கும் ஸ்வபாவமுள்ளவர் என்பதும் வெளியாகிறது. விஷ்ணுவினுடைய ரோமாஞ்சங்களுக்கு புஷ்ப மொட்டுகளை த்ருஷ்டாந்தமாகச் சொல்லி இருப்பதனுல், மொட்டுகள் விரிந்து

(மலர்ந்து) பூஜார்ஹமாக ஆவதுபோல், விஷ்ணுவினுடைய ரோமாஞ்சங்களும், பூஜார்ஹம் என்று தெரிகிறது. அவ்விதமான விஷ்ணுவினுடைய சரீரத்தை ஆச்ரயித்த, மங்கள தேவதை என்ற மஹாலக்ஷ்மீயினுடைய கடைக்கண் பார்வைக்கே ஸமஸ்தமான விபூதியையும், ஐச்வர்யங்களையும் கொடுக்கும் வல்லமை இருப்பதினால் அந்த லக்ஷ்மீ கடாக்ஷமானது எனக்கு எல்லாவிதமான ஸௌபாக்யத்தையும் கொடுக்கட்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறது. லக்ஷ்மீ கடாக்ஷத்திற்கு இந்த கனகதாரா ஸ்தோத்ரமே முக்யமான உபாயமாகும். அதிலும் இந்த முதல் ஸ்லோகமானது அந்தரங்கமான உபாயமாகும் என்ற இதன் தாத்பர்யம் வெளியாகிறது.

मुग्धा मुहुर्विदधती वदने मुरारेः
प्रेमत्रपाप्रणिहितानि गतागतानि ।
मालादृशोः मधुकरीव महोत्पले या
सा मे श्रियं दिशतु सागरसंभवायाः ॥ २ ॥

𑌮𑍁𑌗𑍍𑌧𑌾 𑌮𑍁𑌹𑍁𑌰𑍍𑌵𑌿𑌦𑌧𑌤𑍀 𑌵𑌦𑌨𑍇 𑌮𑍁𑌰𑌾𑌰𑍇𑌃
𑌪𑍍𑌰𑍇𑌮𑌤𑍍𑌰𑌪𑌾𑌪𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑌿 𑌗𑌤𑌾𑌗𑌤𑌾𑌨𑌿 ।
𑌮𑌾𑌲𑌾𑌦𑍃𑌶𑍋𑌃 𑌮𑌧𑍁𑌕𑌰𑍀𑌵 𑌮𑌹𑍋𑌤𑍍𑌪𑌲𑍇 𑌯𑌾
𑌸𑌾 𑌮𑍇 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌦𑌿𑌶𑌤𑍁 𑌸𑌾𑌗𑌰𑌸𑌂𑌭𑌵𑌾𑌯𑌾𑌃 ॥ ௨ ॥

முக்தா முஹுர்விதததீ வதனே முராரே:
ப்ரேமத்ரபாப்ரணிஹிதானி கதாகதானி ।
மாலாத்ருசோ: மதுகரீவ மஹோத்பலே யா
ஸா மே ச்ரியம் திசது ஸாகரஸம்பவாயா: ॥ 2 ॥

பதவுரை :—

महोत्पले - മഹോത്പലെ - மஹோத்பலே = நீலோத்பல புஷ்பத்தில் मधुकरी इव - മധുകരീ ഇവ மதுகரீ இவ = வண்டுபோல் मुरारेः - മുരാരേഃ முராரே: = மஹாவிஷ்ணுவினுடைய वदने - വദനേ வதனே = முகத்தில் प्रेमत्रपाप्रणिहितानि - പ്രേമത്രപാപ്രണിഹിതാനി - ப்ரேமத்ரபாப்ரணிஹிதானி = ப்ரேமை, லஜ்ஜை இந்த இரண்டுகளாலும் ஏற்பட்ட गतागतानि - கதாகதானி கதாகதானி = கமனுகமனங்களை (தர்சனுதர்சனங்களை) அதாவது, கொஞ்ச நேரம் பகவானைப்பார்க்கிறது, பிறகு கொஞ்சம் பார்க்காமலிருக்கிறது என்பதை मुहुः - മുഹുഃ - முஹு: = அடிக்கடி विदधती - വിദധതീ - விதததீ = செய்கிறதாயும், मुग्धा - മുഗ്ധാ - முக்தா = மந்தஹாஸத்துடன் அழகாகவுமிருக்கிற सागरसम्भवायाः - സാഗരസംഭവായാഃ - ஸாகரஸம்பவாயா: = மஹாலக்ஷ்மீயினுடைய या - யா - யா = யாதொரு दृशोःमाला - ദൃശോഃ മാലാ- த்ருசோ : மாலா = இரண்டு கண் த்ருஷ்டிகளுடைய வரிசையுண்டோ सा - സാ - ஸா = அந்த த்ருஷ்டி வரிசையானது मे - മേ - மே = எனக்கு श्रियं - ശ്രിയം - ச்ரியம் = ஸம்பத்தை दिशतु - ദിശതു - திசது = கொடுக்கட்டும்.

தாத்பர்யம் :—

பெரியதாயும் நல்ல வாஸனையுள்ளதாயும் உள்ள நீலோத்பல புஷ்பத்தின் ரஸத்தை க்ரஹிப்பதற்காக வண்டுகளின் வரிசையானது அந்த புஷ்பங்களில் வந்து உட்காருவதாகவும், போகிறதாகவும், எப்படிக்

காணப்படுமோ, அதுபோல் பாற்கடலில் உத்பவித்த மஹாலக்ஷ்மீயானவள், நீலமேகச்யாமள வர்ணமுள்ள தனது பர்த்தாவான மஹாவிஷ்ணுவினுடைய முக மாகிய நீலோத்பல புஷ்பத்தில், தன்னுடைய இரண்டு த்ருஷ்டிகளையும், பரமப்ரேமையினால் செலுத்துகிற வளாயும், பிறகு லஜ்ஜையினால் அந்த த்ருஷ்டிகளையே திருப்பிக்கொள்ளுகிறவளாயும் இருந்து கொண்டு, மந்தஹாஸத்துடன் விளங்கிவருகிறாள். அதாவது, ப்ரேமையோடு ஸ்ரீ மஹாலக்ஷ்மீ தேவியானவள் மஹா விஷ்ணுவினுடைய முகத்தைப் பார்க்கிறதும், பிறகு லஜ்ஜையினால் பார்க்காமலிருப்பது போலும், தன்னுடைய த்ருஷ்டி விலாஸங்களைச் செய்துகொண்டு விளங்குகிறாள். அவ்விதமுள்ள மஹாலக்ஷ்மீயினுடைய கடாக்ஷவீக்ஷணமானது அகண்டமான ஐச்வர்யத்தை எனக்குக் கொடுக்கவேண்டும் என்று அர்த்தத்தை அநுஸந்தானம் செய்துகொண்டு இந்த ச்லோகத்தைப் பாராயணம் செய்யவேண்டும்.

विश्वामरेन्द्रपद विभ्रमदानदक्षं
आनन्दहेतुरधिकं मुरविद्विषोऽपि ।
ईषन्निषीदतु मयि क्षणं ईक्षणार्धं
इन्दीवरोदरसहोदरं इन्दिरायाः ॥ ३ ॥

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌰𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌦 𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌦𑌾𑌨𑌦𑌕𑍍𑌷𑌂
𑌆𑌨𑌨𑍍𑌦𑌹𑍇𑌤𑍁𑌰𑌧𑌿𑌕𑌂 𑌮𑍁𑌰𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑍋𑌽𑌪𑌿 ।
𑌈𑌷𑌨𑍍𑌨𑌿𑌷𑍀𑌦𑌤𑍁 𑌮𑌯𑌿 𑌕𑍍𑌷𑌣𑌂 𑌈𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌧𑌂
𑌇𑌨𑍍𑌦𑍀𑌵𑌰𑍋𑌦𑌰𑌸𑌹𑍋𑌦𑌰𑌂 𑌇𑌨𑍍𑌦𑌿𑌰𑌾𑌯𑌾𑌃 ॥ ௩ ॥

விச்வாமரேந்த்ரபத விப்ரமதாநதக்ஷம்

ஆனந்தஹேதுரதிகம் முரவித்விஷோபி

ஈஷந்நிஷீததுமயி க்ஷணம் ஈக்ஷணார்தம்

இந்தீவரோதரஸஹோதரம் இந்திராயா: ॥ 3 ॥

பதவுரை :—

विश्वामरेन्द्रपदविभ्रमदानदक्षं - വിശ്വാമരേന്ദ്രപദവിഭ്രമദാനദക്ഷം-விச்வாமரேந்த்ரபதவிப்ரமதாநதக்ஷம் = தேவேந்த்ரனுடைய ஸ்தானமாகிற ஸ்வர்க்கத்தில் அடையக்கூடிய ஸமஸ்தவிதமான விலாஸங்களையும் (போக ஸுகத்தை) இந்த லோகத்திலேயே பக்தர்களுக்கு கொடுக்கிற ஸாமர்த்யமுள்ளதாயும் मुरविद्विषोपि - മുരവിദ്വിഷോപി - முரவித்விஷோபி = மஹாவிஷ்ணுவுக்குக்கூட अधिकं (यथातथा)-അധികം (യഥാ തഥാ) அதிகம் (யதா ததா) = அளவிடமுடியாமலிருக்கக்கூடிய आनन्दहेतुः - ആനന്ദഹേതുഃ - ஆனந்தஹேது: = ஸுகத்தைக் கொடுப்பதற்குக் காரணமாயும் इन्दीवरोदरसहोदरं — ഇന്ദീവരോദരസഹോദരം - இந்திவரோதரஸஹோதரம் = நீலோத்பல புஷ்பத்தினுடைய மத்ய பாகத்திற்கு ஸமானமாயும் இருக்கிற इन्दिरायाः - ഇന്ദിരായാഃ - இந்திராயா: = மஹாலக்ஷ்மீயினுடைய ईषत् - ഈഷത് ஈஷத் = ஸ்வல்பமான ईक्षणार्धं - ഈക്ഷണാർദ്ധം-ஈக்ஷணார்தம் கடைக்கண்ணின் பாதிப்பார்வையானது मयि - മയി - மயி = என்னிடத்தில் क्षणं - ക്ഷണം - க்ஷணம் = ஒரு க்ஷணம் மட்டும் निषीदतु - നിഷീദതു - நிஷீதது = இருக்கட்டும்.

தாத்பர்யம் :—

மஹாலக்ஷ்மீயினுடைய கடைக்கண்ணின் பாதிப் பார்வையே ஒரே க்ஷணமாவது ஒருவனுக்கு ஏற்பட்டால், அந்த மனிதன் பெரிய ஸார்வபௌமனுக (அகண்ட ஐச்வர்யத்தோடு கூடினவனுக) ஆகி விடலாம். ஸ்வர்க்கலோகத்திலுள்ள ஸமஸ்தமான ஸுகங்களையும் இந்த லோகத்திலேயே தனது பக்தனுக்கு மஹாலக்ஷ்மீயினுடைய கடாக்ஷவீக்ஷணமானது கொடுக்கும் வல்லமையுள்ளது. மஹாவிஷ்ணுவும் லக்ஷ்மீ கடாக்ஷம் தன்மீது விழுந்ததாற்தான் அபரிச்சின்னமான ஆனந்தத்தை அனுபவிக்கக்கூடிய தான பாக்யத்தை அடைந்துவருகிறுர். லக்ஷ்மீதேவியினுடைய கடாக்ஷவீக்ஷணமோ நீலோத்பல புஷ்பத்தினுடைய மத்ய பாகத்திற்கு ஸமானமானது. நீலோத்பல புஷ்பத்தை லக்ஷ்மீ தேவியினுடைய கடாக்ஷவீக்ஷணத்திற்கு உபமானமாகச் சொன்னதிலிருந்து புஷ்பங்களுக்குள் நீலோத்பல புஷ்பமே சிறந்ததாக ஆகும். அவ்விதமான புஷ்பங்களால் பூஜை செய்வதற்கு அகண்ட ஸச்சிதானந்த ரூபமான பரப்ரம்மமே பாத்ரமாகும். மஹாலக்ஷ்மீதேவியினுடைய கடாக்ஷவீக்ஷணம் எந்த மனிதனிடத்தில் ஏற்படுகிறதோ, அந்த மனிதன் நீலோத்பல புஷ்பத்தால் பூஜிக்கத் தகுந்த பரப்ரம்மத்தினுடைய பாவத்தை அடைந்து ஈச்வரனுகவேதானுகிவிடுகிறுன் என்று அறியவேண்டும். ஆகையால் மஹாலக்ஷ்மீதேவியினுடைய கடாக்ஷத்தை அடைய எல்லோரும் அவச்யம் கனகதாரா ஸ்தோத்ரத்தை பாராயணம் செய்யவேண்டியது.

आमीलिताक्षमधिगम्य मुदा मुकुन्दं
आनन्दकन्दं अनिमेषं अनङ्ग तन्त्रम् ।
आकेकरस्थितकनीनिकपक्ष्मनेत्रं
भूत्यै भवेन्मम भुजङ्गशयाङ्गनायाः ॥ ४ ॥

𑌆𑌮𑍀𑌲𑌿𑌤𑌾𑌕𑍍𑌷𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯 𑌮𑍁𑌦𑌾 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌂
𑌆𑌨𑌨𑍍𑌦𑌕𑌨𑍍𑌦𑌂 𑌅𑌨𑌿𑌮𑍇𑌷𑌂 𑌅𑌨𑌙𑍍𑌗 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌆𑌕𑍇𑌕𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌕𑌨𑍀𑌨𑌿𑌕𑌪𑌕𑍍𑌷𑍍𑌮𑌨𑍇𑌤𑍍𑌰𑌂
𑌭𑍂𑌤𑍍𑌯𑍈 𑌭𑌵𑍇𑌨𑍍𑌮𑌮 𑌭𑍁𑌜𑌙𑍍𑌗𑌶𑌯𑌾𑌙𑍍𑌗𑌨𑌾𑌯𑌾𑌃 ॥ ௪ ॥

ஆமீலிதாக்ஷமதிகம்ய முதா முகுந்தம்
ஆநந்தகந்தம் அநிமேஷம் அநங்க தந்த்ரம் ।
ஆகேகரஸ்திதகநீநிகபக்ஷ்மநேத்ரம்
பூத்யை பவேந்மம புஜங்கசயாங்கநாயா: ॥ 4 ॥

பதவுரை :—

मुदा - 𑌮𑍁𑌦𑌾 - முதா = ஸந்தோஷத்தால் आमीलिताक्ष - 𑌆𑌮𑍀𑌲𑌿𑌤𑌾𑌕𑍍𑌷𑌂 ஆமீலிதாக்ஷம் = கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிற मुकुन्दं - 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌂 - முகுந்தம் = தனது பர்த்தாவான மஹாவிஷ்ணுவை अधिगम्य 𑌅𑌧𑌿𑌗𑌮𑍍𑌯 அதிகம்ய = பார்த்துவிட்டு आनन्दकन्दं - 𑌆𑌨𑌨𑍍𑌦𑌕𑌨𑍍𑌦𑌂 - ஆனந்தகந்தம் = ஆனந்தத்தைக் கொடுக்கிற தாயும் अनिमेषं - 𑌅𑌨𑌿𑌮𑍇𑌷𑌂 - அநிமேஷம் = இமைக் கொட்டலில்லாததாயும் अनङ्गतन्त्रं - 𑌅𑌨𑌙𑍍𑌗𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 - அநங்க தந்த்ரம் = காமோத்ரேகத்தை உண்டுபண்ணுகிறதாயும் உள்ள भुजङ्गशयाङ्गनायाः - 𑌭𑍁𑌜𑌙𑍍𑌗𑌶𑌯𑌾𑌙𑍍𑌗𑌨𑌾𑌯𑌾𑌃 - புஜங்கசயாங்கநாயா: = மஹாலக்ஷ்மியினுடைய आकेकरस्थितकनीनिकपक्ष्मनेत्रं - 𑌆𑌕𑍇𑌕𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌕𑌨𑍀𑌨𑌿𑌕𑌪𑌕𑍍𑌷𑍍𑌮𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 -

ஆகேகரஸ்திதகநீநிகபக்ஷ்மநேத்ரம் = காதளவும் வ்யாபித்த கருவிழிகளோடும் இமைகளோடும் கூடின நேத்ரமானது मम - മമ - மம = எனக்கு भूत्यै - ഭൂത്യൈ - பூத்யை = ஐச்வர்யத்தின் பொருட்டு भवेत् - ഭവേത് - பவேத் = இருக்கட்டும் (ஐச்வர்யங்களைக் கொடுக்கட்டும்.)

தாத்பர்யம்:—

ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவானவர் தனது புண்ய பரிபாகத்தால், அதிஸுந்தரியான இந்த மஹாலக்ஷ்மீயை நாம் பார்யையாக அடைந்தோம் என்ற ஸந்தோஷத்தால், தன் கண்களினுல் இமைக்கொட்டாமலே எப்பொழுதும் மஹாலக்ஷ்மீயை பார்த்துக்கொண்டே இருக்கிறுர். மஹாலக்ஷ்மீயும் தானும், தன்னிடத்தில் மஹாவிஷ்ணு நிரம்ப மயக்கத்தை அடைந்திருக்கிறுர் என்பதை அறிந்து தன் கண்களினுலும் மஹாவிஷ்ணுவையே இமைக்கொட்டாமலே பார்த்துவருகிறுள். அந்தக் கண் பார்வையானது மஹாவிஷ்ணுவிற்கு ஒரு பேரானந்தத்தையும், காமவிகாரத்தையும் உணடு பண்ணுகிறதாக இருந்துவருகிறது. அந்த மஹாலக்ஷ்மீயினுடைய கணகளோ, தீர்க்கமாக நீண்டு கருவிழிகளாலும், இமைகளினுலும் அலங்கரிக்கப்பட்டவைளாக இருக்கின்றன. இவ்விதம் மஹாவிஷ்ணுவினிடத்தில், ப்ரஸரித்து மஹாவிஷ்ணுவிற்கே பரமானந்தத்தைக் கொடுத்துவரும் லக்ஷ்மீகடாக்ஷமானது எனக்கு ஸகலவிதமான ஐச்வர்யத்தையும் கொடுக்க வேணடும் என்ற எண்ணத்துடன் இந்தச்லோகத்தை பாராயணம் செய்பவர்களுக்கு மஹாலக்ஷ்மீயின் பூர்ண கடாக்ஷம் ஏற்பட்டு ஸகலவிதமான ஐச்வர்யமும் ஏற்படும என்பது திண்ணம்.

बाह्वन्तरे मधुजित श्रितकौस्तुभे या
हारावलीव हरिनीलमयी विभाति ।
कामप्रदा भगवतोऽपि कटाक्षमाला
कल्याणं आवहतु मे कमलालयायाः ॥ ५ ॥

𑌬𑌾𑌹𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑍇 𑌮𑌧𑍁𑌜𑌿𑌤𑌃 𑌶𑍍𑌰𑌿𑌤𑌕𑍌𑌸𑍍𑌤𑍁𑌭𑍇 𑌯𑌾
𑌹𑌾𑌰𑌾𑌵𑌲𑍀𑌵 𑌹𑌰𑌿𑌨𑍀𑌲𑌮𑌯𑍀 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 ।
𑌕𑌾𑌮𑌪𑍍𑌰𑌦𑌾 𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌪𑌿 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌆𑌵𑌹𑌤𑍁 𑌮𑍇 𑌕𑌮𑌲𑌾𑌲𑌯𑌾𑌯𑌾𑌃 ॥ ௫ ॥

பாஹ்வந்தரே மதுஜித: ச்ரிதகௌஸ்துபே யா
ஹாராவலீவ ஹரிநீலமயீ விபாதி।
காமப்ரதா பகவதோபி கடாக்ஷமாலா
கல்யாணம் ஆவஹது மே கமலாலயாயா: ॥ 5 ॥

பதவுரை :—

मधुजितः - 𑌮𑌧𑍁𑌜𑌿𑌤𑌃 - மதுஜித: = மஹாவிஷ்ணுவினுடைய बाह्वन्तरे - 𑌬𑌾𑌹𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑍇 - பாஹ்வந்தரே = மார்பில் श्रितकौस्तुभे - 𑌶𑍍𑌰𑌿𑌤𑌕𑍌𑌸𑍍𑌤𑍁𑌭𑍇 - ச்ரிதகௌஸ்துபே = விளங்குகின்ற கௌஸ்துபமணியில் हरिनीलमयी - 𑌹𑌰𑌿𑌨𑍀𑌲𑌮𑌯𑍀 - ஹரிநீலமயீ = இந்த்ரநீலமணிமயமான हारावलीव - 𑌹𑌾𑌰𑌾𑌵𑌲𑍀𑌵 - ஹாராவலீவ = மாலையின் வரிசை போல் कमलालयायाः — 𑌕𑌮𑌲𑌾𑌲𑌯𑌾𑌯𑌾𑌃 - கமலாலயாயா: = லக்ஷ்மீதேவியினுடைய भगवतोऽपि - 𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌪𑌿 - பகவதோபி = விஷ்ணுவுக்குக்கூட कामप्रदा - 𑌕𑌾𑌮𑌪𑍍𑌰𑌦𑌾 - காமப்ரதா = அபீஷ்டத்தைக் கொடுக்கிற या - 𑌯𑌾 - யா = யாதொரு कटाक्षमाला - 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾 - கடாக்ஷமாலா = கடைக்கண் வரிசையின் பார்வையானது

विभाति - விபாதி - விபாதி = விளங்குகிறதோ सा - ஸா - ஸா = அந்த லக்ஷ்மீதேவியினுடைய கடைக்கண் பார்வை मे - மே - மே = எனக்கு कल्याणं - கல்யாணம் - கல்யாணம் = மங்களத்தை आवहतु - ஆவஹது - ஆவஹது = கொடுக்கட்டும்.

தாத்பர்யம் :—

மஹாவிஷ்ணுவானவர் தன் மார்பில் கௌஸ்துப மணியை தரித்துவருகிறார். அதை அடிக்கடி மஹா லக்ஷ்மீயானவள் தன் கடைக்கண்ணால் பார்த்துவரும் பொழுது, அந்த கௌஸ்துபமணியின்பேரில், இந்த்ர நீலமணியினால் ஒரு ஹாரம் போடப்பட்டிருக்கிறதோ என்று தோன்றுகிறது. மஹாலக்ஷ்மீயானவள் உத்தம ஸ்த்ரீயான காரணத்தினால், அவளுடைய கடைக்கண் கள் அதிக கருமை நிறமுள்ளதாக இருக்கின்றன. அத னால் அவைகளுடைய பார்வையை இந்த்ர நீலமணி போல் வர்ணித்தது உசிதமாகும். அத்துடன் லக்ஷ்மீ தேவியினுடைய கடாக்ஷவீக்ஷண்யம்தான் விஷ்ணுவுக் குக் கூட ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடிய தாக இருந்துவருகிறது. அவ்விதம் மஹிமையுள்ள லக்ஷ்மீகடாக்ஷமானது, எனக்கு மங்களத்தையே கொடுக்கவேண்டும்.

कालांबुदालि ललितोरसि कैटभारेः
धाराधरे स्फुरति या तटिदङ्गनेव ।
मातुः समस्तजगतां महनीयमूर्तिः
भद्राणि मे दिशतु भार्गवनन्दनायाः ॥ ६ ॥

𑌕𑌾𑌲𑌾𑌂𑌬𑍁𑌦𑌾𑌲𑌿 𑌲𑌲𑌿𑌤𑍋𑌰𑌸𑌿 𑌕𑍈𑌟𑌭𑌾𑌰𑍇𑌃
𑌧𑌾𑌰𑌾𑌧𑌰𑍇 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 𑌯𑌾 𑌤𑌡𑌿𑌦𑌙𑍍𑌗𑌨𑍇𑌵 ।
𑌮𑌾𑌤𑍁𑌃 𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌗𑌤𑌾𑌂 𑌮𑌹𑌨𑍀𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃
𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑍇 𑌦𑌿𑌶𑌤𑍁 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌨𑌨𑍍𑌦𑌨𑌾𑌯𑌾𑌃 ॥ ௬ ॥

காளாம்புதாளி லலிதோரஸி கைடபாரே:
தாராதரே ஸ்புரதி யா தடிதங்கநேவ ।
மாது: ஸமஸ்தஜகதாம் மஹநீயமூர்த்தி:
பத்ராணி மே திசது பார்க்கவ நந்தநாயா: ॥ 6 ॥

பதவுரை :—

कैटभारेः - 𑌕𑍈𑌟𑌭𑌾𑌰𑍇𑌃 - கைடபாரே: = விஷ்ணுவினுடைய कालाम्बुदालि ललितोरसि - 𑌕𑌾𑌲𑌾𑌂𑌬𑍁𑌦𑌾𑌲𑌿 𑌲𑌲𑌿𑌤𑍋𑌰𑌸𑌿 - காளாம்புதாளி லலிதோரஸி = நீருண்ட மேகத்தினுடைய ஸங்கநாதம்போல் அழகாயுள்ள மார்பில் धाराधरे 𑌧𑌾𑌰𑌾𑌧𑌰𑍇 - தாராதரே = மேகத்தில் तटिदङ्गनेव - 𑌤𑌡𑌿𑌦𑌙𑍍𑌗𑌨𑍇𑌵 - தடிதங்கநேவ = மின்னலாகிற ஸ்த்ரீ ஜாதிபோல் भार्गवनन्दनायाः - 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌨𑌨𑍍𑌦𑌨𑌾𑌯𑌾𑌃 - பார்க்கவ நந்தனுயா: ப்ருகுவம்சத்தில் அவதரித்தவளாயும் समस्त जगतां मातुः 𑌸𑌮𑌸𑍍𑌤 𑌜𑌗𑌤𑌾𑌂 𑌮𑌾𑌤𑍁𑌃 - ஸமஸ்த ஜகதாம் மாது: = ஸகல லோகத்திற்கும் மாதாவாயுமுள்ள மஹாலக்ஷ்மீயினுடைய या-𑌯𑌾-யா = யாதொரு महनीयमूर्तिः - 𑌮𑌹𑌨𑍀𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃-மஹநீயமூர்த்தி: = பூஜிக்கத்தகுந்த ஆக்ருதியானது स्फुरति - 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 - ஸ்புரதி = ப்ரகாசிக்கிறதோ सा - 𑌸𑌾 ஸா = அந்த மூர்த்தியானது मे-𑌮𑍇-மே = எனக்கு भद्राणि - 𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿 - பத்ராணி = மங்களங்களை दिशतु - 𑌦𑌿𑌶𑌤𑍁 - திசது = உண்டுபண்ணட்டும்.

தாத்பர்யம் :—

நீருண்ட மேகத்தினுடைய மத்தியில் அழகான மின்னல் கொடிபோல் மஹாலக்ஷ்மீ தேவியினுடைய அழகான ஆக்ருதியானது, மஹாவிஷ்ணுவினுடைய மார்பில், மஹாலக்ஷ்மீ மஹாவிஷ்ணுவை ஆலிங்கனம் செய்துகொள்ளும் காலத்தில் விளங்கி வருகிறது அவ்விதமான ஆக்ருதியுடைய மஹாலக்ஷ்மீ தேவியோ, ப்ருகு மஹர்ஷியினுடைய வம்சத்தில் அவதரித்தவள். ஸகல லோகத்திற்கும் தாயாராகவும் விளங்கி வருகிறவள். அவ்விதமாயுள்ள மஹாலக்ஷ்மீ தேவியின் அழகான ஆக்ருதியை யாரால் வர்ணிக்க முடியும்? அவ்விதமான மூர்த்தியானது எனக்கு மங்களங்களைக் கொடுத்துவரவேண்டும்.

प्राप्तं पदं प्रथमतः खलु यत्प्रभावात्
मांगल्यभाजि मधुमाथिनि मन्मथेन ।
मय्यापतेत्तदिह मन्थरं ईक्षणार्धं
मन्दालसं च मकरालयकन्यकायाः ॥ ७ ॥

𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌪𑌦𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌤𑌃 𑌖𑌲𑍁 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌤𑍍
𑌮𑌾𑌂𑌗𑌲𑍍𑌯𑌭𑌾𑌜𑌿 𑌮𑌧𑍁𑌮𑌾𑌥𑌿𑌨𑌿 𑌮𑌨𑍍𑌮𑌥𑍇𑌨 ।
𑌮𑌯𑍍𑌯𑌾𑌪𑌤𑍇𑌤𑍍𑌤𑌦𑌿𑌹 𑌮𑌨𑍍𑌥𑌰𑌂 𑌈𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌧𑌂
𑌮𑌨𑍍𑌦𑌾𑌲𑌸𑌂 𑌚 𑌮𑌕𑌰𑌾𑌲𑌯𑌕𑌨𑍍𑌯𑌕𑌾𑌯𑌾𑌃 ॥ ௭ ॥

ப்ராப்தம் பதம் ப்ரதமத: கலு யத்ப்ரபாவாத்
மாங்கல்யபாஜி மதுமாதினி மன்மதேன ।
மய்யாபதேத்ததிஹ மந்த்ரம் ஈக்ஷணார்த்தம்
மந்தாலஸம் ச மகராலயகந்யகாயா: ॥ 7 ॥

பதவுரை :—

मांगल्यभाजि - 𑌮𑌾𑌂𑌗𑌲𑍍𑌯𑌭𑌾𑌜𑌿 - மாங்கல்யபாஜி = ஸர்வ மங்களத்திற்கும் இருப்பிடமாயும் मधुमाथिनि - 𑌮𑌧𑍁𑌮𑌾𑌥𑌿𑌨𑌿 - மதுமாதினி = மது என்ற அஸுரனைக் கொன்றவராயுமுள்ள மஹாவிஷ்ணுவினிடத்தில் मन्मथेन - 𑌮𑌨𑍍𑌮𑌥𑍇𑌨 - மன்மதேன = மன்மதனுலே यत्प्रभावात् - 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 - யத்ப்ரபாவாத் = எந்த லக்ஷ்மீ தேவியினுடைய கடாக்ஷ ப்ரபாவத்தால் प्रथमतः - 𑌪𑍍𑌰𑌥𑌮𑌤𑌃 - ப்ரதமத: = முதலில் पदं-𑌪𑌦𑌂-பதம் = தனக்கு வாஸஸ்தானமானது खलुप्राप्तं - 𑌖𑌲𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 - கலு ப்ராப்தம் = நிச்சயமாக அடையப்பட்டதோ मकरालयकन्यकायाः 𑌮𑌕𑌰𑌾𑌲𑌯𑌕𑌨𑍍𑌯𑌕𑌾𑌯𑌾𑌃 - மகராலய கன்யகாயா: = லக்ஷ்மீதேவியினுடைய मन्दालसं – 𑌮𑌨𑍍𑌦𑌾𑌲𑌸𑌂 - மந்தாலஸம் = அழகாக சலித்துக்கொண்டிருக்கிறதாயும் मन्थरं - 𑌮𑌨𑍍𑌥𑌰𑌂 - மந்தரம் = வ்யாமோஹத்தை உண்டுபண்ணுகிற தாயுமிருக்கிற तत् - 𑌤𑌤𑍍 - தத் = அந்த ईक्षणार्धं - 𑌈𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌧𑌂 - ஈக்ஷணார்த்தம் = அரைக்கண் பார்வையானது इह - 𑌇𑌹 - இஹ = இப்பொழுது मयि च-𑌮𑌯𑌿 𑌚-மயி ச = என்னிடத்திலும் आपतेत् 𑌆𑌪𑌤𑍇𑌤𑍍 - ஆபதேத் = வீசப்படட்டும்.

தாத்பர்யம் :—

மன்மதனுனவன் லோகத்தை ஜயிப்பதில் ப்ரஸித்தி பெற்றவன். அதிலும் முதன்மையான மஹாவிஷ்ணுவை ஜயித்தான. மன்மதன் விஷ்ணுவை ஜயிப்பதில், விஷ்ணுவினிடத்தில் ஏற்பட்ட மஹாலக்ஷ்மீ தேவியினுடைய கடாக்ஷம்தான் அவனுக்கு உதவியாக இருந்தது. அத்த கடாக்ஷத்தின் சலனமோ,

ஸௌந்தர்யமோ, இவ்விதம்தான் என்று வர்ணிக்க முடியாததான மஹிமை யுடையது. அவ்விதமான லக்ஷ்மீ கடாக்ஷமானது, என்னிடத்திலும் வீசி, என்னை ஸௌபாக்யத்தோடு கூடினவனாகச் செய்யவேண்டும்.

दद्याद्दयानुपवनो द्रविणाम्बुधारां
अस्मिन्नकिंचन विहङ्गशिशौ विषण्णे ।
दुष्कर्मघर्ममपनीय चिराय दूरं
नारायण प्रणयिनीनयनाम्बुवाहः ॥ ८ ॥

𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌯𑌾𑌨𑍁𑌪𑌵𑌨𑍋 𑌦𑍍𑌰𑌵𑌿𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌾𑌰𑌾𑌂
𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌕𑌿𑌂𑌚𑌨 𑌵𑌿𑌹𑌂𑌗𑌶𑌿𑌶𑍌 𑌵𑌿𑌷𑌣𑍍𑌣𑍇 ।
𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑌘𑌰𑍍𑌮𑌮𑌪𑌨𑍀𑌯 𑌚𑌿𑌰𑌾𑌯 𑌦𑍂𑌰𑌂
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌪𑍍𑌰𑌣𑌯𑌿𑌨𑍀𑌨𑌯𑌨𑌾𑌮𑍍𑌬𑍁𑌵𑌾𑌹𑌃 ॥ ௮ ॥

தத்யாத்தயானுபவனோ த்ரவிணாம்புதாராம்
அஸ்மின்னகிஞ்சன விஹம்கசிசௌ விஷண்ணே ।
துஷ்கர்மகர்மமபநீய சிராய தூரம்
நாராயண ப்ரணயினீ நயனாம்புவாஹ: ॥ 8 ॥

பதவுரை :—

दयानुपवनः 𑌦𑌯𑌾𑌨𑍁𑌪𑌵𑌨𑌃 - தயானுபவன: = கருணையை அனுகூலமான காற்றாக உடைத்தான नारायण प्रणयिनी नयनाम्बुवाहः - 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌪𑍍𑌰𑌣𑌯𑌿𑌨𑍀 𑌨𑌯𑌨𑌾𑌮𑍍𑌬𑍁𑌵𑌾𑌹𑌃 - நாராயண ப்ரணயிநீ நயநாம்புவாஹ: = ஸ்ரீ தேவியான மஹா லக்ஷ்மீயினுடைய கடாக்ஷமாகிய மேகமானது अस्मिन् - 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - அஸ்மின் = இந்த

विषण्णे - விஷண்ணே - விஷண்ணே = கஷ்டப்படுகிற अकिंचन विहंगशिशौ - அகிஂசந விஹஂகஶிஶௌ - அகிஞ்சன விஹங்கசிசௌ = தரித்ரனுகிற சிறு சாதக பக்ஷியினுடைய விஷயத்தில் दुष्कर्मघर्मं - து³ஷ்கர்மக⁴ர்மம் - துஷ்கர்ம கர்மம் = பாபமாகிற அத்யுஷ்ண தாபத்தை चिराय दूरं - சிராய தூ³ரம் - சிராய தூரம் = வெகுதூரத்திற்கப்பால் अपनीय - அபநீய - அபநீய = போக்கடித்துவிட்டு द्रविणांबुधारां - த்³ரவிணாம்பு³தா⁴ராம் - த்ரவிணும்புதாராம் = பணமாகிற ஜலப்ரவாஹத்தை दद्यात् - த³த்³யாத் - தத்யாத் = கொடுக்கட்டும் (வர்ஷிக்கட்டும்).

தாத்பர்யம் :—

மஹா லக்ஷ்மீயினுடைய நயன ஸௌந்தர்யமானது கருவிழி விலாஸத்தால் நீருண்ட மேகம்போல் விளங்கிவருகிறது. அவ்விதம் மேகத்திற்கு ஸமானமான லக்ஷ்மீ தேவியினுடைய நயனத்திற்கு, லக்ஷ்மீ தேவிக்கு பக்தகோடிகளிடத்திலிருக்கும் கருணையே, அனுகூலமான காற்ருயும், ஆகின்றது. மேகத்திறகு புரோவாதம் (கீழ் காற்று) அனுகூலமான காற்றென்றும், அந்த புரோவாதத்துடன் கூடின மேகமானது, பூர்ணமாக வர்ஷிக்குமென்பதும் லோக ப்ரஸித்தமானது. கருணையாகிய புரோவாதத்துடன் கூடின லக்ஷ்மீதேவியினுடைய நயனமாகிற மேகமோ தாரித்ரியததிற்கு காரணமான பாப கர்மாவாகிய க்ரீஷ்மரிதுவின் தாபத்தை வெகு தூரத்திற்கப்பால் துரததிவிட்டு, தனமாகிய வர்ஷத்தை பரிபூர்ணமாக பக்தகோடிகளுக்கு கொடுக்கின்றது. லோகத்திலுள்ள மேகமோ ஜலத்தை வர்ஷிக்கும். அம்பிகையினுடைய நயனமாகிற மேகமோ தனத்தை வர்ஷிக்கின்றது. லோகத்திலுள்ள மேகத்திற்கு கீழ்காற்று ஸஹாயமாக ஆகும். அம்பிகையினுடைய நயனமாகிற

மேகத்திற்கோ, அபாரமான கருணேயே ஸகாவாக ஆகும். இவ்விதம் மஹிமை தங்கிய கருணேயை அனுகூலமாக உடைய அம்பிகையின் நயனமாகிய மேகமானது மழையை எதிர்பார்க்கும் சாதக பக்ஷிபோல், தனப்பெருக்கை எதிர்பார்க்கும் தரித்ரனுன என் விஷயத்தில், தாரித்ரியத்தைப் போக்கடித்து, பரிபூர்ணமான தனத்தையும் கொடுத்து பரம பாமரனை என்னே ரக்ஷிக்கவேண்டும் என்று அர்த்தத்தை அனுஸந்தானம் செய்து கொண்டு மேற்சொன்ன ச்லோகத்தை பாராயணம் செய்ய வேண்டும். அவ்விதம் செய்தால் ப்ராணிகளுக்கு தாரித்ரியமே தொலேந்து அஷ்டைச்வர்யங்களும் உண்டாகும் என்பதில் சந்தேகமே யில்லே.

इष्टाविशिष्टमतयोऽपि यया दयार्द्र
दृष्ट्यात्रिविष्टपपदं सुलभं लभन्ते ।
दृष्टिः प्रहृष्ट कमलोदर दीप्तिरिष्टां
पुष्टिं कृषीष्ट मम पुष्कर विष्टरायाः ॥ ९ ॥

𑌇𑌷𑍍𑌟𑌾 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌮𑌤𑌯𑍋𑌽𑌪𑌿 𑌯𑌯𑌾 𑌦𑌯𑌾𑌰𑍍𑌦𑍍𑌰
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌪𑌪𑌦𑌂 𑌸𑍁𑌲𑌭𑌂 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟 𑌕𑌮𑌲𑍋𑌦𑌰 𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌂
𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌂 𑌕𑍃𑌷𑍀𑌷𑍍𑌟 𑌮𑌮 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰 𑌵𑌿𑌷𑍍𑌟𑌰𑌾𑌯𑌾𑌃 ॥ ௯ ॥

இஷ்டா விசிஷ்ட மதயோபி யயா தயார்த்ர
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டபபதம் ஸுலபம் லபந்தே
த்ருஷ்டி: ப்ரஹ்ருஷ்ட கமலோதர தீப்திரிஷ்டாம்
புஷ்டிம் க்ருஷீஷ்ட மம புஷ்கர விஷ்டராயா: ॥ 9 ॥

பதவுரை :—

इष्टा विशिष्टमतयोऽपि - 𑌇𑌷𑍍𑌟𑌾 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌮𑌤𑌯𑍋𑌽𑌪𑌿 - இஷ்டா விசிஷ்டமதயோபி = ஸ்வர்க ஸாதனமான யாகம் செய்வதில் த்ருப்தி யில்லாத மனதோடு கூடினவர்களும் (அதாவது ஸ்வர்கத்திற்கு அநர்ஹாளான மஹா பாபிகளும்கூட) यया - 𑌯𑌯𑌾 - யயா = எந்த दयार्द्र दृष्ट्या - 𑌦𑌯𑌾𑌰𑍍𑌦𑍍𑌰 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 - தயார்த்ர த்ருஷ்ட்யா = லக்ஷ்மீ தேவியினுடைய கருணை நிறைந்த த்ருஷ்டியினாலே त्रिविष्टपपदं - 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌪𑌪𑌦𑌂 த்ரிவிஷ்டபபதம் ஸ்வர்க்க பதவியை सुलभं - 𑌸𑍁𑌲𑌭𑌂 - ஸுலபம் = அதிஸுலபமாக (ச்ரமமில்லாமல்) लभन्ते - 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 - லபந்தே = அடைகிறார்களோ प्रहृष्ट कमलोदरदीप्तिः - 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟 𑌕𑌮𑌲𑍋𑌦𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌃 ப்ரஹ்ருஷ்ட கமலோதர தீப்தி: = ஸந்தோஷமாக இருக்கும் விஷ்ணுவினிடத்தில் ப்ரஸரித்த காந்தியோடு கூடினதான सा 𑌸𑌾 ஸா = அந்த पुष्कर विष्टरायाः - 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰 𑌵𑌿𑌷𑍍𑌟𑌰𑌾𑌯𑌾𑌃 - புஷ்கர விஷ்டராயா: = தாமரை மலரில் வீற்றிருக்கும் மஹாலக்ஷ்மீ தேவியினுடைய दृष्टिः - 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 - த்ருஷ்டி: = கடாக்ஷமானது मम - 𑌮𑌮 - மம = எனக்கு इष्टां - 𑌇𑌷𑍍𑌟𑌾𑌂 இஷ்டாம் = அபிமதமான पुष्टिं - 𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌂 புஷ்டிம் = ஸம்ருத்தியை कृषीष्ट - 𑌕𑍃𑌷𑍀𑌷𑍍𑌟 க்ருஷீஷ்ட = செய்யட்டும்.

தாத்பர்யம் :—

ப்ராணிகளுக்கு ஸுகம்தான் விரும்பத்தகுந்தது — துக்கமல்ல. அந்த ஸுகமும் ஸ்வர்க்க ஸுகமேதான் ஆகும். அந்த ஸ்வர்க்க ஸுகத்தை அடைவதற்கு ஜ்யோதிஷ்டம் முதலான யாகங்களை சாதனமாக சாஸ்த்ரங்கள் சொல்கின்றன. ப்ராணிகளுக்கு புண்ய

பலமான ஸ்வர்க்க ஸுகத்தில் இச்சை இருந்தாலும் ஸாதனமான புண்ய கர்மாக்களை அனுஷ்டிப்பதில் புத்திக்கு த்ருப்தி ஏற்படுவது ரொம்பவும் அறிதாகும்.

पुण्यस्य फलमिच्छन्ति, पुण्यं नेच्छन्ति मानवाः ।

𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌫𑌲𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿, 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌨𑍇𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ।

புண்யஸ்ய பலமிச்சந்தி, புண்யம் நேச்சந்தி மாநவா :

என்றபடி, புண்யத்தைச்செய்யாமல், புண்ய பலத்தை மட்டும் அநுபவிக்கும்படி கொடுத்தால் அதை அனுபவிக்க ஸகல ப்ராணிகளும் ஸந்நத்தர்களாக இருப்பார்கள்! அது ஸாத்யமாகுமா? ஆகிலும் அவ்விதம் ஸாதன அனுஷ்டானம் செய்யாமலிருக்கும் ப்ராணிகளும் லக்ஷ்மீதேவியினுடைய கடாக்ஷபாதம் தன்னிடத்தில் ஏற்பட்டு விட்டால் ஸ்வர்க்க பதவியையுங்கூட அதிஸுலபமாக அடைந்து விடுகிறார்கள். அந்த தேவியினுடைய கடாக்ஷவீக்ஷணமானது அவ்விதமான மஹிமையோடு கூடினதாக ஆகும். அவ்விதம் மஹிமை தங்கிய கடாக்ஷ த்ருஷ்டியோ தன்னைப் பார்த்து பரமானந்தத்தை யனுபவித்துவரும் பத்மநாபனிடத்திலே தான் எப்பொழுதும் ப்ரஸரித்துக் கொண்டு ஜ்வலித்து வருகிறது. அந்த பத்மாஸனத்தில் அமர்ந்திருக்கும் லக்ஷ்மீதேவியினுடைய த்ருஷ்டியானது எனக்கும் அபிமதமான அபீஷ்டத்தைக் கொடுத்து என்னை ஸமர்த்தனாகச் செய்யவேண்டும் என்று அனுசந்தானம் செய்துகொண்டு இந்த ச்லோகத்தை பாராயணம் செய்யவேண்டும்.

गीर्देवतेति गरुडध्वज सुन्दरीति

शाकंभरीति शशिशेखरवल्लभेति ।

सृष्टिस्थिति प्रलयकेलिषु संस्थितायै

तस्यै नमस्त्रिभुवनैक गुरोस्तरुण्यै ॥ १० ॥

𑌗𑍀𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑍇𑌤𑌿 𑌗𑌰𑍁𑌡𑌧𑍍𑌵𑌜 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌤𑌿
𑌶𑌾𑌕𑌂𑌭𑌰𑍀𑌤𑌿 𑌶𑌶𑌿𑌶𑍇𑌖𑌰 𑌵𑌲𑍍𑌲𑌭𑍇𑌤𑌿 ।
𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌲𑌯𑌕𑍇𑌲𑌿𑌷𑍁 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌯𑍈
𑌤𑌸𑍍𑌯𑍈 𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑍈𑌕 𑌗𑍁𑌰𑍋𑌸𑍍𑌤𑌰𑍁𑌣𑍍𑌯𑍈 ॥ ௧௦ ॥

கீர்தேவதேதி கருடத்வஜ ஸுந்தரீதி
சாகம்பரீதி சசிசேகர வல்லபேதி ।
ஸ்ருஷ்டிஸ்திதி ப்ரலயகேலிஷு ஸம்ஸ்திதாயை
தஸ்யை நமஸ்த்ரிபுவனைக குரோஸ்தருண்யை ॥ 10 ॥

பதவுரை :—

सृष्टिस्थिति प्रलयकेलिषु - 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌲𑌯𑌕𑍇𑌲𑌿𑌷𑍁 - ஸ்ருஷ்டிஸ்திதி ப்ரளயகேலிஷு = ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமாகிய லீலைகளில் गीर्देवतेति - 𑌗𑍀𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑍇𑌤𑌿 - கீர்தேவதேதி = அதிலும் ஸ்ருஷ்டி காலத்தில் ஸரஸ்வதி என்றும் गरुडध्वज सुन्दरीति - 𑌗𑌰𑍁𑌡𑌧𑍍𑌵𑌜 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌤𑌿 - கருடத்வஜ ஸுந்தரீதி = ஸ்திதி காலத்தில் மஹாவிஷ்ணுவின் பத்னியான மஹாலக்ஷ்மீ என்றும் शाकंभरीति - 𑌶𑌾𑌕𑌂𑌭𑌰𑍀𑌤𑌿 - சாகம்பரீதி = துர்க்கமாஸுர ஸம்ஹாரம் செய்யும் காலத்தில், சதாக்ஷி, சாகம்பரி, துர்க்கை என்றும் शशिशेखरवल्लभेति - 𑌶𑌶𑌿𑌶𑍇𑌖𑌰𑌵𑌲𑍍𑌲𑌭𑍇𑌤𑌿 - சசிசேகரவல்லபேதி = ஸம்ஹார காலத்தில் சந்த்ரசூட பத்னியான பார்வதீ என்றும் संस्थितायै - 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌯𑍈 - ஸம்ஸ்திதாயை = பாஸிக்கிறவளாயும் तस्यै - 𑌤𑌸𑍍𑌯𑍈 - தஸ்யை = அளவுக்குட்படாத மஹிமையோடு கூடினவளாயும் இருக்கிற त्रिभुवनैक गुरोः - 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑍈𑌕 𑌗𑍁𑌰𑍋𑌃 - த்ரிபுவனைக குரோ: = த்ரி

புவனத்திற்கும், அதாவது ஸமஸ்தமான லோகத்திற்கும் பிதாவான பரப்ரம்மத்தினுடைய तरुण्यै - தரூ்ணை்யை - தருண்யை = பத்னியான மஹாலக்ஷ்மீயின் பொருட்டு नमः - நம: - நம: = நமஸ்காரம்.

தாத்பர்யம் :—

இந்த கனகதாரா ஸ்தோத்ரத்தில் ஸ்துதிக்கப்படுகிற தேவதையோ ஸாக்ஷாத் ராஜ ராஜேச்வரி என்ற பராம்பிகைதான் என்பதில் சந்தேகமேயில்லை. அந்த பராம்பிகையோ, ஜகத் ஸ்ருஷ்டி காலத்தில் ஸரஸ்வதீ என்றும், ஸ்திதி காலத்தில் லக்ஷ்மீ என்றும், ஸம்ஹார காலத்தில் பார்வதி என்றும், துர்க்கமாஸுரன் முதலான துஷ்டர்களை வதம் செய்த காலத்தில், சதாக்ஷி, துர்க்கை, சாகம்பரீ என்றும் பலவாருன காரணப்பெயர்களுடன் விளங்கி வருகிருள். அந்த பரதேவதையோ ஸமஸ்தமான சேதன, அசேதன ப்ரபஞ்சத்திற்கும் விவர்த்த உபாதான காரணமான பரப்ரம்மத்தினுடைய பட்டமஹிஷீயாகிருள். ஸகல விதமான உபநிஷத்துக்களிலும் அவளுடைய மஹிமையை அளவிடமுடியாமல் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமான மஹிமைதங்கிய பராம்பிகையின் பொருட்டு நான் நமஸ்காரம் செய்கிறேன். என்னுடைய தாரித்ரியத்தைப் போக்கடித்து ஜகதம்பிகை என்னை ரக்ஷிக்கவேண்டும்.

श्रुत्यै नमोऽस्तु शुभकर्मफलप्रसूत्यै
रत्यै नमोऽस्तु रमणीयगुणार्णवायै
शक्त्यै नमोऽस्तु शतपत्रनिकेतनायै
पुष्ट्यै नमोऽस्तु पुरुषोत्तमवल्लभायै ॥ ११ ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌶𑍁𑌭𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑍍𑌯𑍈
𑌰𑌤𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌰𑌮𑌣𑍀𑌯𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌾𑌯𑍈 ।
𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌶𑌤𑌪𑌤𑍍𑌰𑌨𑌿𑌕𑍇𑌤𑌨𑌾𑌯𑍈
𑌪𑍁𑌷𑍍𑌟𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌯𑍈 ॥ ௧௧ ॥

ச்ருத்யை நமோஸ்து சுபகர்மபலப்ரஸூத்யை
ரத்யை நமோஸ்து ரமணீயகுணார்ணவாயை ।
சக்த்யை நமோஸ்து சதபத்ரநிகேதநாயை
புஷ்ட்யை நமோஸ்து புருஷோத்தமவல்லபாயை ॥ 11 ॥

பதவுரை :—

श्रुत्यै - 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑍈 - ச்ருத்யை = வேத ப்ரம்மஸ்வரூபிணியான பரதேவதையின் பொருட்டு नमः - 𑌨𑌮𑌃 - நம: = நமஸகாரமானது अस्तु - 𑌅𑌸𑍍𑌤𑍁 - அஸ்து = இருக்கட்டும் शुभकर्मफलप्रसूत्यै - 𑌶𑍁𑌭𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑍍𑌯𑍈 - சுபகர்மபலப்ரஸூத்யை = ஜீவகோடிகளுக்கு கர்ம பலத்தைப் பிரித்துக் கொடுக்கும் தெய்வமான रत्यै - 𑌰𑌤𑍍𑌯𑍈 - ரத்யை = ரதி என்ற மஹாலக்ஷ்மியின் பொருட்டு नमः - 𑌨𑌮𑌃 - நம: = நமஸ்காரமானது अस्तु - 𑌅𑌸𑍍𑌤𑍁 - அஸ்து = இருக்கட்டும் रमणीय गुणार्णवायै - 𑌰𑌮𑌣𑍀𑌯 𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌾𑌯𑍈 - ரமணீய குணார்ணவாயை = கல்யாணகுண ரத்னகரமான शक्त्यै - 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 சக்த்யை = பராசக்தியின் பொருட்டு नमः - 𑌨𑌮𑌃 - நம: நமஸ்காரமானது अस्तु - 𑌅𑌸𑍍𑌤𑍁 - அஸ்து = இருக்கட்டும் शतपत्रनिकेतनायै 𑌶𑌤𑌪𑌤𑍍𑌰𑌨𑌿𑌕𑍇𑌤𑌨𑌾𑌯𑍈 சதபத்ர நிகேதனையை = தாமரை புஷ்பத்தை வாஸஸ்தானமாக உடைத்தானவளான पुष्ट्यै - 𑌪𑍁𑌷𑍍𑌟𑍍𑌯𑍈 -

புஷ்ட்யை = ஸம்பூர்ணமான தேவதையின் பொருட்டு नमः - നമഃ - நம: = நமஸ்காரமானது अस्तु - അസ്തു - அஸ்து - இருக்கட்டும் पुरुषोत्तम वल्लभायै - പുരുഷോത്തമ വല്ലഭായൈ - புருஷோத்தம வல்லபாயை = விஷ்ணு பத்னியான மஹா லக்ஷ்மிதேவியின் பொருட்டு नमः - നമഃ - நம: = நமஸ்காரமானது अस्तु - അസ്തു - அஸ்து = இருக்கட்டும்.

தாத்பர்யம் :—

ஜீவகோடிகள் செய்யும் கர்மாக்களைப் பிரித்து அதற்கு அனுகுணமான பலத்தை கொடுக்கும் சக்தி பராசக்தியான மஹாலக்ஷ்மீ ஒருவளுக்குத்தான் உண்டு அந்த காலத்தில் அந்த தேவியானவள் சப்தப்ரம்மம் என்ற வேதஸ்வரூபியாக விளங்கி வருகிருள். மங்களத்திற்கே இருப்பிடமாய் அளவற்ற ஸௌந்தர்யம், லாவண்யம், ஸௌகுமார்யம் என்ற மஹிமையோடு கூடிவிளங்குவதால ரதி தேவியாகவும் விளங்கி வருகிருள். பத்மாஸனத்தில் அமர்ந்து த்யானயோகத்தில் இருந்து வருவதால ஸகல லோகத்தையும் ஸம்ரக்ஷிக்கக் கூடிய சக்தியோடு கூடினவளாக பாஸிக்கிற படியால் பராசக்தி என்றும் சொல்லப் படுகிருள். (க்ஷரம் என்ற) ஆகாசம் முதலான ப்ரபஞ்சம், மாயை என்று சொல்லப்படும் (அக்ஷர ப்ரபஞ்சம்) இரண்டு விதமான ப்ரபஞ்சத்திற்கும் விலக்ஷணமான காரணத்தால் புருஷோத்தமன் என்று சொல்லப் படும் மஹாவிஷ்ணுவின தர்மபத்னியாகவும் விளங்கி வருகிருள், இவ்விதமான மாஹாத்ம்யம் உள்ள பராம்பிகையின திருவடியில் அநேககோடி நமஸ்காரங்களை அர்ப்பணம் செய்கின்றேன்.

A. No. 5991
R65

नमोऽस्तु नालीकनिभाननायै
नमोऽस्तु दुग्धोदधि जन्मभूम्यै ।
नमोऽस्तु सोमामृत सोदरायै
नमोऽस्तु नारायण वल्लभायै ॥ १२ ॥

𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌨𑌾𑌲𑍀𑌕𑌨𑌿𑌭𑌾𑌨𑌨𑌾𑌯𑍈
𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌦𑍁𑌗𑍍𑌧𑍋𑌦𑌧𑌿 𑌜𑌨𑍍𑌮𑌭𑍂𑌮𑍍𑌯𑍈 ।
𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸𑍋𑌮𑌾𑌮𑍃𑌤 𑌸𑍋𑌦𑌰𑌾𑌯𑍈
𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌯𑍈 ॥ ௧௨ ॥

நமோஸ்து நாலீகநிபாநநாயை
நமோஸ்து துக்தோததி ஜன்மபூம்யை ।
நமோஸ்து ஸோமாம்ருத ஸோதராயை
நமோஸ்து நாராயண வல்லபாயை ॥ 12 ॥

பதவுரை :—

नालीकनिभाननायै - 𑌨𑌾𑌲𑍀𑌕𑌨𑌿𑌭𑌾𑌨𑌨𑌾𑌯𑍈 - நாலீக நிபாநநாயை = தாமரைப் புஷ்பத்திற்கு ஸமானமான முகத்தோடு கூடினவளாய் உள்ள தேவியின் பொருட்டு नमोऽस्तु - 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 - நமோஸ்து = நமஸ்காரமானது இருக்கட்டும் दुग्धोदधि जन्मभूम्यै - 𑌦𑍁𑌗𑍍𑌧𑍋𑌦𑌧𑌿 𑌜𑌨𑍍𑌮𑌭𑍂𑌮𑍍𑌯𑍈 - துக்தோததி ஜந்மபூம்யை = பாற்கடலை உற்பத்தி ஸ்தானமாக உடைய தேவியின் பொருட்டு नमोऽस्तु - 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 - நமோஸ்து = நமஸ்காரமானது இருக்கட்டும் सोमामृत सोदरायै - 𑌸𑍋𑌮𑌾𑌮𑍃𑌤 𑌸𑍋𑌦𑌰𑌾𑌯𑍈 - ஸோமாம்ருத ஸோதராயை := சந்த்ரன், அம்ருதம் இந்த இரண்டு வஸ்துக்களையும் ஸஹோதர

ஸ்தானத்தில் உடைய தேவியின் பொருட்டு नमोऽस्तु - நமோஸ்து நமோஸ்து = நமஸ்காரமானது இருக்கட்டும் नारायण वल्लभायै - நாராயண வல்லபாயை - நாராயண வல்லபாயை = பாற்கடலில் சயனம் செய்துகொண்டு விளங்கிவரும் ஸாக்ஷாத் மஹா விஷ்ணுவின் தர்மபத்தினியான லக்ஷ்மீதேவியின் பொருட்டு नमोऽस्तु நமோஸ்து - நமோஸ்து = நமஸ்காரமானது இருக்கட்டும்.

தாத்பர்யம் :—

'மலர்ந்த தாமரைப் புஷ்பத்திற்கு ஸமானமான முகத்துடன் எந்த லக்ஷ்மீதேவியானவள் விளங்கிவருகிருளோ, அந்த பரதேவதைக்கு நமஸ்காரம்' என்று சொல்கிறதினுல், 'உபாஸகனுடைய என் விஷயத்தில் தேவியானவள் எப்பொழுதும் ப்ரஸன்னமான முகத்தோடும் அனுக்ரஹ புத்தியோடும் கூடினவளாக இருக்கட்டும்' என்ற ப்ராத்தனை ஸித்திக்கிறது. அத்துடன் அந்த தேவியானவள் பாற்கடலில் உண்டானவள். அவளை நமஸ்கரித்து ஸ்தோத்ரம் செய்தால் ஸமுத்ரத்தில் ஸகலவிதமான ரத்னங்கள் இருக்குமாதலால், அந்த நவரத்னங்களாலும் உபாஸகனுடைய க்ருஹத்தை நிரப்பிவிடுகிருள் என்பது வெளியாகிறது.

ஆகையால் 'பாற்கடலை ஜன்ம பூமியாக உடைய பரதேவதைக்கு நமஸ்காரம் செய்கிறேன்' என்று ஸ்துதிக்கவேண்டும். முதல் பாதத்தால் பக்தனுடைய விஷயத்தில் தேவியினுடைய ப்ரஸன்னத்தையும் இரண்டாவது பாதத்தால் அகண்டமான ஐச்வர்யதானமும் ஸித்திக்கிறது. அத்துடன் அம்பாள் பாற்கடலில் உண்டானபொழுது அம்ருதமும், சந்த்ரனும் உண்டானுர்கள் என்பது புராணங்களில் ப்ரஸித்தமானது

தான். அதனுல் சந்த்ரனும், அம்ருதமும் தேவிக்கு ஸஹோதர ஸ்தானத்தில் இருந்துவருகிருர்கள். சந்த்ரனே தாபத்தை நிவ்ருத்தி செய்துவைக்கிறவன். அம்ருதமோ மரணத்தை இல்லாமல் செய்யக்கூடிய ஒரு ஸாதனமாகும் லக்ஷ்மீயை ஸ்துதித்தால் அந்த தேவி ப்ரஸன்னமானவுடன் மனிதனுக்கு ஏற்பட்ட ஆத்யாத்மிகதாபம், ஆதிதைவிகதாபம், ஆதிபௌதிக தாபம் என்ற மூன்றுவிதமான தாபங்களிலிருந்தும் மனிதன் விடுபட்டு, அம்ருதம் என்ற சப்தத்தால் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கும் மோக்ஷத்தையும் அடைகிருன் என்பது ஸித்தமாக ஆகிறது. ஆகையால் ‘ சந்த்ரனையும் அம்ருதத்தையும் ஸஹோதர ஸ்தானத்தில் வைத்துக்கொண்டிருக்கும் மஹாலக்ஷ்மீக்கு நமஸ்காரம்’ என்று ஸ்துதிக்கவேண்டும். அத்துடன் அந்த தேவியானவள் நாராயணன் என்ற ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவின் அந்தரங்கமான மனைவி. அதனுல் லக்ஷ்மீ தேவியினுடையப்ரஸாதம்ஏற்பட்டுவிட்டால் விஷ்ணு ஸாரூப்யம் கிடைத்துவிடும். அதுதான் மோக்ஷமென்று சொல்லப்படும் ஆகையால் தேவியானவள் மோக்ஷமென்ற பரமபுருஷார்த்தத்தையும் உபாஸகனுக்கு கொடுக்கும் சக்தி உள்ளவள் என்பது தெரிகிறது. அக்காரணத்தாலும் அந்த தேவியை, ‘ ஹே, பரதேவதையே! நீ ஸாமான்யப்பட்டவளல்ல, விஷ்ணுவிற்கு நிரம்பவும் அந்தரங்கமான மனைவியாக ஆகிருய். உனக்கு நான் நமஸ்காரம் செய்கிறேன். நீ என்னை விஷ்ணுவின் ஸமீபம் கொண்டுசேர்த்து என்னை க்ருதார்த்தனுகச் செய்ய வேண்டிக்கொள்கிறேன்’ என்று அம்பாளை ஸ்துதிக்கவேண்டும். முதல் பாதத்தால் ப்ரஸன்னத்தையும், இரண்டாவது பாதத்தால் ஐச்வர்யமும், மூன்ருவது பாதத்தால் தாபத்ரய நிவ்ருத்தியும் மோக்ஷ ஸாம்ராஜ்யமும், நான்காவது பாதத்தால் அந்த மோக்ஷ ஸாம்ராஜ்யமும் விஷ்ணு ஸாரூப்யமே என்றும் க்ரமமாக ச்லோகத்தால் வெளியாகிறது.

संपत्कराणि सकलेन्द्रियनन्दनानि
साम्राज्य दानविभवानि सरोरुहाक्षि ।
त्वद्वन्दनानि दुरिताहरणोद्यतानि
मामेव मातरनिशं कलयन्तु मान्ये ॥ १३ ॥

ஸ꠶ஂவ꠶த்கராணி ஸகலேந்த்ரியநந்தநாநி
ஸாம்ராஜ்ய தாநவிபவாநி ஸரோருஹாக்ஷி ।
த்வத்வந்தநாநி துரிதாஹரணோத்யதாநி
மாமேவ மாதரநிஶம் கலயந்து மாந்யே ॥ கங ॥

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரியநந்தநாநி
ஸாம்ராஜ்ய தானவிபவாநி ஸரோருஹாக்ஷி ।
த்வத்வந்தநாநி துரிதாஹரணோத்யதாநி
மாமேவ மாதரநிசம் கலயந்துமாந்யே ॥ 13 ॥

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர் 630 307

பதவுரை :—

हे सरोरुहाक्षि - ஹே ஸரோருஹாக்ஷி - ஹே ஸரோருஹாக்ஷி — தாமரை மலர்போன்ற கண்களை உடைத்தான ஹே தேவியே ! मान्ये - மாந்யே - மாந்யே = ஸகல ஸுராஸுரர்களாலும், மனிதர்களாலும் பூஜிக்கத் தகுந்த பரதேவதையே संपत्कराणि - ஸம்பத்கராணி- ஸம்பத்கராணி = ஸகலவிதமான ஸம்பத்துக்களையும் கொடுக்கக்கூடியதாயும், सकलेन्द्रियनन्दनानि ஸகலேந்த்ரிய நந்தநாநி - ஸகலேந்த்ரியநந்தநாநி = ஸமஸ்தமான ஞாநேந்த்ரியங்கள், கர்மேந்த்ரியங்கள் எல்லாவற்றிற்கும் பரமாநந்தத்தைக் கொடுக்கிறதாயும், साम्राज्य दानविभवानि - ஸாம்ராஜ்யதாநவிபவாநி - ஸாம்ராஜ்ய தானவிபவாநி = அரசாளும் தன்மையைக் கொடுக்

கும் வைபவம் உள்ளதாயும், दुरिताहरणोद्यतानि - து³ரிதா ஹரணோத்³யதாநி - துரிதாஹரணோத்யதாநி = ஸகல விதமான பாபங்களையும் அபஹரிப்பதில் கங்கணம்கட்டிக்கொண்டிருப்பதாயும் உள்ள त्वद्वन्दनानि - த்வத்³வந்த³நாநி - த்வத்வந்தநாநி = உனக்கு நான் செய்கிற நமஸ்காரங்கள் हे मातः - ஹே மாத꞉ - ஹே மாத: = ஹே, அன்னையே अनिशं - அநிஶம் - அநிசம் = எப்பொழுதும் माम् - மாம் - மாம் = என்னை कलयन्त्वेव - கலயந்த்வேவ - கலயந்த்வேவ = ரக்ஷிக்கவே ரக்ஷிக்கட்டும்.

தாத்பர்யம் :—

மஹாலக்ஷ்மீ தேவிக்கு பக்தர்கள் செய்யும் நமஸ்காரங்களின் மஹிமையானது இந்த ச்லோகத்தால் சொல்லப்படுகிறது. அதாவது, அம்பாளுக்கு செய்யும் நமஸ்காரமானது பக்தகோடிகளுக்கு ஸகலவிதமான ஸம்பத்துக்களையும் கொடுத்து இந்த்ரியங்களை ஸன்மார்க்கத்தில் திருப்பி மோக்ஷாநந்தத்தை அடைவதற்கு ஸாதனமாகும்படி செய்து, அதாவது, அந்த இந்த்ரியங்களை ஜீவனுக்கு ஸ்வாதீனமாகும்படி செய்து, இந்த்ரியங்களுக்கு ஒருவிதமான ஆநந்தத்தையும் கொடுக்கின்றது. அத்துடன் நமஸ்கரித்தவனை அவ்விதம் அந்த அம்பாளுக்குச் செய்த நமஸ்காரமானது சக்ரவர்த்தியாகவும் செய்துவிடுகிறது. மனிதன் செய்த ஸகலவிதமான பாபங்களையும் துலைத்து மனிதனை மஹாபரிசுத்தனாகவும் செய்துவிடுகிறது. ஆகையால் இவ்விதம் மஹிமை தங்கிய நமஸ்காரங்களை பரதேவதைக்கு யார்தான் செய்யமாட்டார்கள். ஹே, தாயே! ஹே லோகமான்யே! ஹே, தாமரை புஷ்பம போல் மலர்ந்த கண்ணுள்ளவளே! உனக்கு நான் நமஸ்காரம் செய்வதைத் தவிர வேறு ஒன்றும் எனனிடத்தில் என்னை ரக்ஷிக்கும் உபாயமில்லை. உன் நமஸ்

காரங்களோ அளவற்ற மகிமையுள்ளது. ஆகையால் என்னால் உன்னை உத்தேசித்து செய்யப்படும் நமஸ்காரங்களே என்னை ரக்ஷித்து க்ருதார்த்தனாக்க வேண்டும் என்று த்யானம் செய்துகொண்டு ஸ்துதிக்க வேண்டும்.

यत्कटाक्षसमुपासनाविधिः
सेवकस्य सकलार्थसंपदः ।
संतनोति वचनांगमानसैः
त्वां मुरारिहृदयेश्वरीं भजे ॥ १४ ॥

𑌯𑌤𑍍𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌸𑌮𑍁𑌪𑌾𑌸𑌨𑌾𑌵𑌿𑌧𑌿𑌃
𑌸𑍇𑌵𑌕𑌸𑍍𑌯 𑌸𑌕𑌲𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌪𑌦𑌃 ।
𑌸𑌂𑌤𑌨𑍋𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌂𑌗𑌮𑌾𑌨𑌸𑍈𑌃
𑌤𑍍𑌵𑌾𑌂 𑌮𑍁𑌰𑌾𑌰𑌿𑌹𑍃𑌦𑌯𑍇𑌶𑍍𑌵𑌰𑍀𑌂 𑌭𑌜𑍇 ॥ ௧௪ ॥

யத்கடாக்ஷஸமுபாஸநாவிதி:
ஸேவகஸ்ய ஸகலார்த்தஸம்பத: ।
ஸந்தனோதி வசனாங்க மானஸை:
த்வாம் முராரி ஹ்ருதயேச்வரீம் பஜே ॥ 14 ॥

பதவுரை :—

हे देवि - 𑌹𑍇 𑌦𑍇𑌵𑌿 - ஹே தேவி = ஹே லக்ஷ்மீ தேவியே यत्कटाक्ष समुपासनाविधिः 𑌯𑌤𑍍𑌕𑌟𑌾𑌕𑍍𑌷 𑌸𑌮𑍁𑌪𑌾𑌸𑌨𑌾𑌵𑌿𑌧𑌿𑌃 - யத்கடாக்ஷ ஸமுபாஸநாவிதி: = யாதொரு உன்னுடைய கடைக்கண் பார்வையினுடைய த்யானம் செய்தல் सेवकस्य - 𑌸𑍇𑌵𑌕𑌸𑍍𑌯 - ஸேவகஸ்ய = பக்தனுக்கு सकलार्थ संपदः - 𑌸𑌕𑌲𑌾𑌰𑍍𑌥 𑌸𑌂𑌪𑌦𑌃 - ஸகலார்த ஸம்பத: = ஸமஸ்தவிதமான ஸம்பத்துக்களை

யும் संतनोति – സംതനോതി - ஸந்தநோதி = கொடுக்கின்றதோ तां - താം - தாம் = அப்பேர்ப்பட்ட मुरारि हृदयेश्वरीं - മുരാരി ഹൃദയേശ്വരീം - முராரி ஹ்ருதயேச்வரீம் = மஹாவிஷ்ணுவினுடைய ப்ராண நாயகியான त्वां - ത്വാം - த்வாம் = உன்னை वचनांगमानसैः – വചനാംഗമാനസൈഃ - வசநாங்கமாநஸை: = வாக்கு, மனது, சரீரம் என்ற த்ரிவித காரணங்களாலும் भजे - ഭജേ – பஜே = பஜிக்கின்றேன்.

தாத்பர்யம் :—

லக்ஷ்மீதேவியினுடைய கடாக்ஷ வீக்ஷணத்தின் பெருமையை த்யானம்செய்த மாத்ரத்தில் த்யானம் செய்கிறவனுக்கு ஸகலவிதமான ஸம்பத்துக்களும் மேன்மேலும் அபிவ்ருத்தி யடைகின்றது. இவ்விதமான மஹிமை தங்கிய மஹாலக்ஷ்மீயினுடைய கடாக்ஷ வீக்ஷணத்திற்கு பாத்ரமாக ஆகவேண்டுமானல் மஹாலக்ஷ்மீயை எப்பொழுதும் வாக்கு, காயம், மனது என்ற த்ரிவித கரணத்தாலும பஜனம் செய்யவேண்டியது. 'முரன் என்ற அஸுரனைக் கொன்று ஸஜ்ஜனங்களை ரக்ஷித்த மஹாவிஷ்ணுவினுடைய தர்மபதனியாகிய ஹே பரதேவதே! உனனை நான் எப்பொழுதும் பஜிக்கின்றேன்' என்ற எண்ணத்துடன் இந்த ச்லோகத்தை பாராயணம் செய்யவும்.

सरसिजनिलये सरोजहस्ते
धवलतमांशुक गन्धमाल्यशोभे ।
भगवति हरिवल्लभे मनोज्ञे
त्रिभुवनभूतिकरि प्रसीद मह्यम् ॥ १५ ॥

𑌸𑌰𑌸𑌿𑌜𑌨𑌿𑌲𑌯𑍇 𑌸𑌰𑍋𑌜𑌹𑌸𑍍𑌤𑍇
𑌧𑌵𑌲𑌤𑌮𑌾𑌂𑌶𑍁𑌕𑌗𑌨𑍍𑌧𑌮𑌾𑌲𑍍𑌯𑌶𑍋𑌭𑍇 ।
𑌭𑌗𑌵𑌤𑌿 𑌹𑌰𑌿𑌵𑌲𑍍𑌲𑌭𑍇 𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑍇
𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌭𑍂𑌤𑌿𑌕𑌰𑌿 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌮𑌹𑍍𑌯𑌮𑍍 ॥ ௧௫ ॥

ஸரஸிஜ நிலயே ஸரோஜஹஸ்தே
தவளதமாம்சுக கந்தமால்ய சோபே ।
பகவதி ஹரிவல்லபே மனோக்ஞே
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம் ॥ 15 ॥

பதவுரை :—

सरसिजनिलये - 𑌸𑌰𑌸𑌿𑌜𑌨𑌿𑌲𑌯𑍇 - ஸரஸிஜநிலயே = தாமரஸ புஷ்பத்தில் வஸிக்கிற ஹே லக்ஷ்மீதேவியே! सरोजहस्ते - 𑌸𑌰𑍋𑌜𑌹𑌸𑍍𑌤𑍇 - ஸரோஜஹஸ்தே = தாமரஸ புஷ்பத்தை கையில் வைத்துக்கொண்டிருக்கிற ஹே பரதேவதே! धवलतमांशुकगन्धमाल्यशोभे - 𑌧𑌵𑌲𑌤𑌮𑌾𑌂𑌶𑍁𑌕𑌗𑌨𑍍𑌧𑌮𑌾𑌲𑍍𑌯𑌶𑍋𑌭𑍇 - தவலதமாம்சுககந்தமால்ய சோபே = ரொம்பவும் வெண்மைநிறமான அழகான வெண்பட்டு, வெண்மை நிறமுள்ள புஷ்பமாலை இந்த இரண்டுகளாலும் சோபிக்கிற ஹே தாயே! हे भगवति - 𑌹𑍇 𑌭𑌗𑌵𑌤𑌿 - ஹே பகவதி = ஜகத்தினுடைய உத்பத்தி, விநாசம், வித்யை, அவித்யை, கதி, ஆகதி என்ற ஆறு தத்வங்களையும் அறிந்த ஸர்வக்ஞையான பராசக்தியே! हरिवल्लभे - 𑌹𑌰𑌿𑌵𑌲𑍍𑌲𑌭𑍇 - ஹரிவல்லபே = மஹாவிஷ்ணுவிற்கு ப்ரியமான தேவியே! मनोज्ञे - 𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑍇 - மனோக்ஞே = ப்ராணிகளுடைய மனஸ் ஸங்கல்பத்தை அறியும் சக்தியுள்ளவளே! त्रिभुवन भूतिकरि - 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨 𑌭𑍂𑌤𑌿𑌕𑌰𑌿 - த்ரிபுவன பூதிகரி =

ஸமஸ்தமான லோகங்களுக்கும் ஐச்வர்யத்தைக் கொடுக்கிறவளே ! मह्यम् - 𑌮𑌹𑍍𑌯𑌮𑍍 - மஹ்யம் = என் பொருட்டு प्रसीद- 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 - ப்ரஸீத = அநுக்ரஹம் செய்.

தாத்பர்யம் :—

லக்ஷ்மீதேவிக்கு தாமரை புஷ்பமே வாஸஸ்தானமாகும். தன் கையிலேயும் தாமரை புஷ்பத்தை வைத்திருக்கிறுள். ரொம்ப அழகான வெண்பட்டு புடவையை கட்டிக்கொண்டு வெளுப்பான ஜாதி மல்லிகை புஷ்பமாலையும் தரித்துக்கொண்டு விளங்கி வருகிறுள். ஜகத்தினுடைய உத்பத்தி ஸ்தானம், லயஸ்தானம், வித்யை, அவித்யை, கதி, ஆகதி, இவைகளுடைய ரஹஸ்யத்தை அறிந்தவள். மஹாவிஷ்ணுவுக்கு ரொம்பவும் அந்தரங்கமான மஹிஷியாக ஆவாள். மூன்று லோகத்திற்கும் ஐச்வர்யத்தை இவள்தான் கொடுக்கிறவள். இவ்வித மஹிமையுள்ள லக்ஷ்மீதேவியானவள் எனக்கு அநுக்ரஹம் செய்யட்டும் என்று த்யானம் செய்ய வேண்டும்.

दिग्घस्तिभिः कनककुंभ मुखावसृष्टः
स्वर्वाहिनीविमलचारुजलप्लुतांगीम् ।
प्रातर्नमामि जगतां जननोमशेष
लोकाधिनाथगृहिणीं अमृताब्धिपुत्रीम् ॥ १६ ॥

𑌦𑌿𑌗𑍍𑌘𑌸𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 𑌕𑌨𑌕𑌕𑍁𑌮𑍍𑌭𑌮𑍁𑌖𑌾𑌵𑌸𑍃𑌷𑍍𑌟
𑌸𑍍𑌵𑌰𑍍𑌵𑌾𑌹𑌿𑌨𑍀𑌵𑌿𑌮𑌲𑌚𑌾𑌰𑍁𑌜𑌲𑌪𑍍𑌲𑍁𑌤𑌾𑌂𑌗𑍀𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍍𑌨𑌮𑌾𑌮𑌿 𑌜𑌗𑌤𑌾𑌂 𑌜𑌨𑌨𑍀𑌮𑌶𑍇𑌷
𑌲𑍋𑌕𑌾𑌧𑌿𑌨𑌾𑌥𑌗𑍃𑌹𑌿𑌣𑍀𑌮𑌮𑍃𑌤𑌾𑌬𑍍𑌧𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌮𑍍
॥ ௧௬ ॥

திக்கஸ்திபி: கநக கும்ப முகாவஸ்ருஷ்ட:
ஸ்வர்வாஹிநீ விமலசாரு ஜலப்லுதாங்கீம் ।
ப்ராதர்நமாமி ஜகதாம் ஜனனீமசேஷ
லோகாதிநாத க்ருஹிணீம் அம்ருதாப்தி புத்ரீம் ॥ 16 ॥

பதவுரை :—

दिग्घस्तिभिः - 𑌦𑌿𑌗𑍍𑌘𑌸𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 - திக்கஸ்திபி: - திக்கஜங்களால் कनककुंभमुखावसृष्टस्वर्वाहिनी विमलचारुजलप्लुतांगीम् - 𑌕𑌨𑌕𑌕𑍁𑌮𑍍𑌭𑌮𑍁𑌖𑌾𑌵𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌵𑌰𑍍𑌵𑌾𑌹𑌿𑌨𑍀 𑌵𑌿𑌮𑌲𑌚𑌾𑌰𑍁𑌜𑌲𑌪𑍍𑌲𑍁𑌤𑌾𑌂𑌗𑍀𑌂 - கநககும்பமுகாவஸ்ருஷ்டஸ்வர்வாஹிநீ விமல சாருஜலப்லுதாங்கீம் = தங்கக்குடத்தினுடைய முக வழியாக அபிஷேகம் செய்யப்பட்ட நிர்மலமான கங்கா ஜலத்தால் ஸ்நானம் செய்யப்பட்டு பரிசுத்த மான அங்கங்களோடு கூடினவளாயும் जगतां - 𑌜𑌗𑌤𑌾𑌂 - ஜகதாம் = லோகங்களுக்கு जननीम् 𑌜𑌨𑌨𑍀𑌂 - ஜன னீம் = தாயாராயும் अशेषलोकाधिनाथगृहिणीम् - 𑌅𑌶𑍇𑌷𑌲𑍋𑌕𑌾𑌧𑌿𑌨𑌾𑌥𑌗𑍃𑌹𑌿𑌣𑍀𑌮𑍍 - அசேஷலோகாதிநாதக்ருஹி ணீம் = ஸமஸ்தமான லோகத்திற்கும் அதிபதியான மஹாவிஷ்ணுவினுடைய தர்மபத்னியாயும் अमृताब्धि-पुत्रीम् - 𑌅𑌮𑍃𑌤𑌾𑌬𑍍𑌧𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌮𑍍 - அம்ருதாப்திபுத்ரீம் = ஸுதாஸிந்துவினுடைய (ஸமுத்ர ராஜனுடைய) புத்ரியாயும் உள்ள மஹாலக்ஷ்மியை प्रातः - 𑌪𑍍𑌰𑌾𑌤𑌃 -

ப்ராத: = ப்ராதக் காலத்தில் ನಮಾಮಿ – 𑌨𑌮𑌾𑌮𑌿 - நமாமி = நமஸ்கரிக்கின்றேன்.

தாத்பர்யம்:—

லக்ஷ்மீதேவிக்கு திக்கஜங்களெல்லாம் ப்ரதிதினமும் ஸ்வர்ண கடத்தில் கங்கையிலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து அபிஷேகம் செய்கின்றன. அதனுல் லக்ஷ்மீதேவியானவள் ப்ரதிதினம் கங்கா ஸ்நானம் செய்து மஹாபரிசுத்தமான அவயவங்களோடு கூடினவளாக விளங்கிவருகிருள். அந்த லக்ஷ்மீதேவி தான் ஸர்வ லோகத்திற்கும் ஜனனியாக ஆகிருள். ஸர்வ லோகத்திற்கும் அதிபதியான மஹாவிஷ்ணுவினுடைய மஹிஷியும் அவளே. அம்ருதக்கடலில் அந்த லக்ஷ்மீதேவியானவள் உண்டானவள். அவ்விதமான பரமேச்வரியை ப்ராதக்காலத்தில் விழித்தவுடன் ப்ரதிதினம் நமஸ்காரம் செய்கிறவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் உண்டாகும்.

कमले कमलाक्षवल्लभे त्वम्
करुणापूरतरंगितैरपांगैः ।
अवलोकय मामकिंचनानाम्
प्रथमं पात्रमकृत्रिमं दयायाः ॥ १७ ॥

𑌕𑌮𑌲𑍇 𑌕𑌮𑌲𑌾𑌕𑍍𑌷𑌵𑌲𑍍𑌲𑌭𑍇 𑌤𑍍𑌵𑌮𑍍
𑌕𑌰𑍁𑌣𑌾𑌪𑍂𑌰𑌤𑌰𑌂𑌗𑌿𑌤𑍈𑌰𑌪𑌾𑌂𑌗𑍈𑌃 ।
𑌅𑌵𑌲𑍋𑌕𑌯 𑌮𑌾𑌮𑌕𑌿𑌂𑌚𑌨𑌾𑌨𑌾𑌮𑍍
𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑌕𑍃𑌤𑍍𑌰𑌿𑌮𑌂 𑌦𑌯𑌾𑌯𑌾𑌃 ॥ ௧௭ ॥

கமலே கமலாக்ஷவல்லபே த்வம்
கருணாபூரதரங்கிதைரபாங்கை: ।
அவலோகய மாமகிஞ்சனானாம்
ப்ரதமம் பாத்ரமக்ருத்ரிமம் தயாயா: ॥ 17 ॥

பதவுரை :—

कमले - കമലേ - கமலே = ஹே மஹாலக்ஷ்மீயே! कमलाक्षवल्लभे - കമലാക്ഷവല്ലഭേ - கமலாக்ஷவல்லபே = புண்டரீகாக்ஷனுடைய பட்டமஹிஷியான பரதேவதே! त्वं - ത്വം - த்வம் = நீ अकिंचनानां അകിംചനാനാം - அகிஞ்சனானாம் = தரித்ராளுக்குள் प्रथमं - പ്രഥമം - ப்ரதமம் = முந்தினவனையும் दयायाः - ദയായാഃ - தயாயா: = உன்னுடைய கருணைக்கு अकृत्रिमं - അകൃത്രിമം - அக்ருத்ரிமம் = சுத்தமான पात्रम् - പാത്രം பாத்ரம் = அர்ஹனையுமுள்ள मां - മാം - மாம் = என்னை करुणापूरतरंगितैः - കരുണാപൂരതരംഗിതൈഃ - கருணாபூரதரங்கிதை: = க்ருபையினால் நிறைந்து அலைகளைப்போல் அடிக்கடி சலித்துக் கொண்டிருக்கிற अपांगैः — അപാംഗൈഃ - அபாங்கை: = கடைக்கண் பார்வைகளால் अवलोकय - അവലോകയ – அவலோகய = கொஞ்சம் பார்த்து அநுக்ரஹிக்க வேண்டும்.

தாத்பர்யம் :—

ஹே லக்ஷ்மீதேவியே! தரித்ராளுக்குள் நான் ரொம்பவும் அக்ரேஸரனாக இருந்துவருகிறேன். உன்னுடைய கருணைக்கு நான்தான் முக்யமான பாத்ரமாவேன். உன்னுடைய க்ருபையினால் நிறைந்த

கடாக்ஷத்தால் என்னை கொஞ்சம் பார்த்து தன்யனாக ஆக்கவேண்டும்.

स्तुवन्ति ये स्तुतिभिः अमीभिः
अन्वहं त्रयीमयीं त्रिभुवनमातरं रमाम् ।
गुणाधिका गुरुतर भाग्यभाजिनः
भवन्ति ते भुवि बुधभाविताशयाः ॥ १८ ॥

𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 𑌅𑌮𑍀𑌭𑌿𑌃
𑌅𑌨𑍍𑌵𑌹𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀𑌮𑌯𑍀𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌮𑌾𑌤𑌰𑌂 𑌰𑌮𑌾𑌮𑍍 ।
𑌗𑍁𑌣𑌾𑌧𑌿𑌕𑌾 𑌗𑍁𑌰𑍁𑌤𑌰 𑌭𑌾𑌗𑍍𑌯𑌭𑌾𑌜𑌿𑌨𑌃
𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌭𑍁𑌵𑌿 𑌬𑍁𑌧𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌶𑌯𑌾𑌃 ॥ ௧௮ ॥

ஸ்துவந்தி யே ஸ்துதிபி: அமீபி:
அன்வஹம் த்ரயீமயீம் த்ரிபுவனமாதரம் ரமாம் ।
குணாதிகா குருதர பாக்யபாஜின :
பவந்தி தே புவி புதபாவிதாசயா: ॥ 18 ॥

பதவுரை :—

ये - 𑌯𑍇 - யே = எவர்கள் अन्वहं - 𑌅𑌨𑍍𑌵𑌹𑌂 - அன்வஹம் = தினந்தோறும் अमीभिः स्तुतिभिः - 𑌅𑌮𑍀𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 - அமீபி: ஸ்துதிபி: = இந்த ஸ்துதிகளால் त्रिभुवनमातरं - 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌮𑌾𑌤𑌰𑌂 - த்ரிபுவனமாதரம் = ஸர்வ லோக ஜனனியாயும் त्रयीमयीं - 𑌤𑍍𑌰𑌯𑍀𑌮𑌯𑍀𑌂 - த்ரயீமயீம் = சப்தப்ரம்மரூபிணியாயும் உள்ள रमां - 𑌰𑌮𑌾𑌂 - ரமாம் = லக்ஷ்மீதேவியை स्तुवन्ति - 𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 - ஸ்துவந்தி = ஸ்தோத்ரம் செய்கிறார்களோ ते - 𑌤𑍇 தே = அவர்கள் भुवि - 𑌭𑍁𑌵𑌿 - புவி = இந்த புண்ய பூமி

யில் गुणाधिकाः - ഗുണാധികാഃ - குணாதிகா: = குணத்தால் உத்க்ருஷ்டர்களாயும் गुरुतरभाग्यभाजिनः - ഗുരുതരഭാഗ്യഭാജിനഃ - குருதரபாக்யபாஜின: = மேலான ஸௌபாக்யத்தோடு கூடினவர்களாயும் बुधभावितशया - ബുധഭാവിതാശയാഃ - புதபாவிதாசயா: = வித்வான்களால் பஹுமானிக்கப்பட்ட மனோபாவத்தோடு கூடினவர்களாகவும் - भवन्ति - ഭവന്തി - பவந்தி = ஆகிறார்கள்.

தாத்பர்யம் :—

இந்த கனகதார ஸ்தோத்ரத்தால் தினந்தோறும் காலையில் எழுந்திருந்தவுடன் மஹாலக்ஷ்மீயை ஸ்துதிக்கிற ஜனங்கள் பரம ஸௌபாக்யத்தோடு கூடினவர்களாகவும், அஷ்டைச்வர்ய ஸம்பன்னர்களாகவும் லக்ஷ்மீ கடாக்ஷத்திற்கு முக்யமான பாத்ரர்களாகவும் ஆவார்கள் என்பது ஸித்தம்.

கோவிலூர் ஆதீனம்
5994
R65(அ5கு)
கோவிலூர்-630307